Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# நாடார் மஹாஜன சங்கம் 12-வது கான்பரன்ஸ், அருப்புக்கோட்டை.

## வரவேற்பு சேர்மன் அட்ரஸ்.

கடவுள் வணக்கம்.

எல்லாம் வல்ல இறைவனே! நினது திருவருளால் இந்நகரின் கண் எம்மனோர்கள் கருத்தொருமித்து ஆலோசித்து அனுஷ்டானத்தில் கொண்டு வருவதற்குக் கூடியுள்ளோம். நாங்கள் செய்யும் காரியங்கள், சன்மார்க்கமும், சிறப்புமுடையதாயிருக்க வேணுமாயும், எங்களுடைய 12-வது கான்பரன்ஸ் மங்களகரமாக நிறைவேற வேண்டுமாயும் அன்புடன் பக்தி பூர்வமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

வரவேற்பு.

நாடார் குல சகோதரர்களே !

சகோதரிகளே !

புண்ணிய சீலர்களே !

வருக! வருக!! எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி, இந்த சங்கம் எல்லோரும் மனமுவந்து விஜயம் செய்த இந்நாள் நன்னாளாகுக! நமது நாடார் ஜன சமூகத்தின் அபிவிர்த்தியையும், முன்னேற்றத்தையுங் கருதி, உங்கள் சொந்த வேலைகளையும், சிரமங்களையும் பொருட்படுத்தாது ஜாதீய உணர்ச்சி கொண்டு, பல நகரங்களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும் வந்திருக்கின்ற உங்கள் வரவு நல்வரவாகுக! உங்களுக்காக நாங்கள் ஏற்படுத்தியிருக்கும் சௌகரியங்கள் உங்கள் கௌரவத்திற்குத் தக்க வசதி இல்லாமலிருக்கலாம். அக்குற்றங் குறைகளை குல நன்மையை நாடி இவண் விஜயம் செய்திருக்கும் நீங்கள் குணமாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

உங்கள் பெருமைக்கும், மதிப்புக்கும் தக்கபடி தனித்தனி உங்களுக்கு முகமன் கூறி உபசாரங்கள் செய்ய அளவுகடந்த ஆசை கொண்டுள்ளேனாயினும்,

"முகாக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகாக நட்பது நட்பு"

என்பதை நினைந்து, உங்களுக்கு விசேஷமாக முகமன் ஒன்றும் கூறாமல், உபசாரணைச் சபையின் பிரதிநிதியாக நான் என்னுடைய மனப்பூர்வமான வந்தனத்லதச் செலுத்தி வணக்கத்துடன் வரவேற்கின்றேன்.

எங்கள் அழைப்பிற்கிணங்கி, தங்கள் சிரமம் கருதாது இங்கு விஜயஞ் செய்திருக்கும் சகல பெரியோர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனஞ் செலுத்தி அன்புடன் வரவேற்கின்றேன்.

நகர்வளம்.

சான்றோர்களே !

புண்ணிய பூமியாம் இப் பரதகண்டத்தில், எந்நாட்டினுஞ் சிறந்த தென்னாடாகிய நமது பாண்டிய நாட்டின்கண், பூமகள் திருமுகமெனக் குலவிய நலமுறு திருவாலவாயைச் சார்ந்து வில்வவன க்ஷேத்திரமென்றும், திருநல்லூரென்றும், திருநாமங்களைப் பெற்றதான இவ்வருப்புக்கோட்டை மாநகரின் பெருமை களனைத்தையுமெடுத்துரைக்க வல்லார் யாவர்! இந்நகரத்தில் பெறுதற்கரிய இம்மானிடப் பிறவி கடைத்தேறும் வண்ணம், பக்தியில் சிறந்த நம்மனோர்களால், சுமார் பத்துலக்ஷ ரூபாய்க்கு மேல் திருப்பணி செய்து சிறைப்புற்றோங்கும், ஸ்ரீமத் அகண்டகார சச்சிதானந்த சுத்த சாட்குண்ணிய சுயம்பிரகாசப் பிழம்பு வாகிய சாக்ஷாத் ஸ்ரீ அமுதவல்லி சமேத அமுதலிங்கேசப் பெருமான் சிவாலயமும், நமது அன்னையாம் ஸ்ரீ முத்துமாரி யம்பிகையின் ஆலயமும், நமது குலத் தோன்றல், ஸ்ரீமத் வனுநிநாத நாயனுர் திருமடாலயமும், அஞ்ஞான இருளை அகற்றி, மெய்ஞ்ஞானத்தையும் அறிவு ஒழுக்கங்களையும் நல்கும் நமது சைவபானு க்ஷத்திரிய வித்தியாசாலையும், அதைச் சேர்ந்த பிரதம பாடசாலையும், அழகிய பல சிங்கார நந்தனவனங்களும், நீர் வாவிகளும், நாட்டின் நலத்தையும், நமது குலத்தின் முன்னேற்றத்தையும், லக்ஷியமாகக் கொண்டுழைக்கும் நமது "நாடார் குல மித்திரன்" பத்திரிகாலயமும், அனுதினமும் அநேகருக்கு அறிவைப் புகட்டி வருகின்ற மு. மு. மு. வாசகசாலையும், ஜீவ ஹிம்சையை ஒழிப்பான் வேண்டி பிரசுரங்களாலும் உபந்நியாசங்களாலும் பிரசாரம் செய்யும் ஜீவ காருண்யப் பிரசார சபையும், சங்கீத சாஹித்ய பஜனை மடாலயங்களும், பல மாந்தர்களின் ஆலயங்களும், பல ஆண், பெண் பாடசாலைகளும், மனிதர்களுக்கு இன்றியமையாத உடை முதலியவற்றை ஆக்குவதற்குரிய சுமார் பதினாயிரம் நெசவுத் தறிகளும், ஆதிகாலந்தொட்டு வெளிநாடுகளுக்கு விசேஷமாக ஜவுளி, கடலை எண்ணெய் வற்றுமதியில் பேர்பெற்றதும் சுமார் முப்பத்தையாயிரம் ஜனத்தொகை கொண்டதுமான இந்நகருக்கு, நீங்கள் உங்கள் சுயநலம் கருதாது, குலநலம் கருதி விஜயம் செய்திருப்பதைப் பார்த்து உளம் பூரித்து, உவகையெய்தி, வரவேற்பு சபையின் பிரதிநிதியாக மீண்டும் ஒரு முறை வரவேற்கின்றேன்.

அவையடக்கம்.

அறிவிற்சிறந்த ஆன்றோர்களே!

இங்குள்ள நமது ஜன சமூகத்தில், என்னிலும் முதிர்ந்த அறிவும், அனுபவமும், ஆற்றலும் வாய்ந்த மேதாவிகள் அநேகர் இருப்பினும், அவர்களை விடுத்து, அறிவு ஆற்றல் அனுபவம் முதலியவற்றில் மிகக் குறைந்த என்னை வரவேற்புச் சபையின் தலைவனாகத் தெரிந்தெடுத்ததற்குக் காரணம், இங்குள்ள நமது ஜன சமூகத்தார் என் மீது கொண்டுள்ள அன்பே யாம்.

நான் இதுபோன்ற பெரிய மகாநாடுகளில் இதுவரை பேசிப் பழகியவனல்லேன்; இத்தகைய பொறுப்பான ஸ்தானத்தை வகித்துப் பழக்கமுடையவனல்லேன்; சொற்சாதுரியமும் உடையவனல்லேன்; ஆயினும், நான் நமது குலாபிவிர்த்தி சம்பந்தமாக இனிக்கூறும் அபிப்பிராயங்கள், முந்திய மகாநாடுகளின் அபிப்பிராயங்களுக்கு வேறுபட்டிருப்பினும், உங்கள் அபிப்பிராயங்களுக்கு மாறுபட்டிருப்பினும், எனது உள்ளக்கிடக்கையை வெளியிடாது விடுத்தால், கண்ணியமான இந்தஸ்தானத்தில் என் கடமையைச் செலுத்தத் தவறிவிட்டவனாவேன்.

தற்காலம், வரவேற்பு ஸ்தானத்திலுள்ளவர்கள், வரவேற்பது மட்டுமன்றி, அவர்களுக்குத் தெரிந்த சில விஷயங்களைச சொல்வதும் வழக்கமாய் விட்டபடியால், நானும் என் சிற்றறிவிற் கெட்டியவாறு இங்கு உங்கள் திருச்சமுகத்தில் சொல்ல உத்தேசித்திருக்கிற விஷயங்களைத் தாங்கள் அமைதியாய்க்கேட்டு, அவைகளில் காணும் குறைகளை நீக்கிக் குணங்களை யுட்கொண்டொழுகுமாறு உங்களை நான் மிகவும் தாழ்மையாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கல்வி.

கற்றோர்களே!

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப [இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு

என்ற ஆன்றோர் வாக்கின்படி, கல்வியே மக்கட்குரிய இன்றியமையாத பொருளென்பதை நன்கு அறிந்துள்ள தங்கள் முன்னிலையில், கல்வியைப்பற்றி விரிவாக எடுத்துரைக்க வேண்டுவதில்லை. எனினும் அதன் பேரில் எனக்குள்ள ஆசையால், சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

ஆண், பெண் என்ற இருபாலார்க்கும் கல்வியானது அறிவு, ஒழுக்கம் உயர்வு முதலியவைகளைக் கொடுக்கவும், இல்லற தருமத்தைச் செவ்வனே நடத்தவும், மோக்ஷசாம்ராட்சியத்லத அடையவும், கோபம், காருண்யமின்மை முதலிய துர்க்குணங்களை, சாந்தம், பொறை, கருணை முதலிய நற்குணங்களாக மாற்றவும் வல்லமையுடையது. கல்வியினுலேயே உலகத்தில் எந்த தேசமும், எந்த ஜாதியாரும், முன்னேறியிருக்கிறார்களென்பதை சரித்திர மூலமாக அறிந்திருக்கிறோம். நம்மை யாளும் பிரிட்டன் தேசமும் மற்றும் அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான் முதலிய தேசங்களும் கல்வியினுலேயே தற்கால மேலான நிலைமையை அடைந்திருக்கின்றன.

நமது நாட்டிலும், பிராமணர்கள் ஆதி முதல் கல்வியையே பிரதானமாகக் கொண்டு அபிவிர்த்தியாகியதின் பலனுக, அந்தக் காலத்திலும் சரி, இந்த நவீன நாகரீக காலத்திலும் சரி, பெரிய பெரிய உத்தியோகங்களை வகிப்பதோடு, எல்லாத் துறைகளிலும் முன்னணியில் நின்று, பெரும் புகழை அடைந்து வருகிறார்கள். இதேபோல் பார்விக்காரர்களும், அன்னியர்களால் ஒடுக்கப்பட்டு இந்தியாவுக்கு வந்தவர்களாயிருந்தபோதிலும், கல்வியே பிரதானமாகக் கற்றதின் பலனுக, பெரிய உத்தியோகஸ்தர்களாகவும், தனவந்தர்களாகவும், பெரிய வியாபாரிகளாகவும் இருக்கிறார்கள். கல்வியையே பிரதானமாகக் கொண்ட மற்ற சில வகுப்பாரும் இதேபோல் மேன்பாடு அடைந்திருக்கிறார்கள்.

இதை அனுசரித்தே நமது குலப் பெரியோர்களும் பூர்வகாலந்தொடங்கி நம்மவர்கள் வசிக்கும் ஒவ்வொரு ஊரிலும், தங்கள் சந்ததியார்களின் க்ஷேமத்தையும் பொது நலத்தையுங் கருதி பல சங்கங்களை ஸ்தாபித்து நடத்தி வந்திருக்கிறார்கள். தற்காலத்திலும் அதே நோக்கத்தோடு பல கலாசாலைகளும் ஆரம்பப் பாடசாலைகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இருந்தபோதிலும், நம் ஜன சமூகமானது இன்னும் போதிய அளவு கல்வியில் முன்னேற்ற மடையவில்லையென்பதைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. இவைகளை ஆழ்ந்து யோசிக்குங்கால் தற்காலத்தில் நம் ஜன சமூகத்தினர்க்குக் கல்வியில் போதிய ஊக்கமும் முயற்சியும் உண்டாகவில்லையென்று நினைக்க இடமிருக்கிறது. தவிர, நாம் செய்துவரும் வியாபாரத்திற்கு, உயர்தரக் கல்வி அவசியமில்லை யெனக்கருதி, சிறிது படித்தவுடன் நிறுத்திக் கொண்டு, ஷை வியாபாரத் தொழிலேயே நம்மவர்கள் கவனிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். நம்மவர்களால் நமக்காக எத்தனையோ கல்விச்சாலைகள் அமைக்கப்பெற்றிருந்தும், நம் மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி கற்பிக்கப்பெற்றும், பெற்றோர்கள் கல்வி விஷயத்தில் பராமுகமாயிருப்பது வருந்தத் தக்கதே. ஆகவே, இது விஷயத்தில் எல்லோரும் மிகுந்த ஊக்கம் காட்டும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். முந்திய மஹாநாடுகளில் சொல்லப்பட்டிருக்கிறபடி நமது சிறுவர்களை குறைந்த பக்ஷம் ஆறாவது பாரம் வரைக்கும், சிறுமிகளை 3-வது பாரம் வரைக்கும் கட்டாயம் படிக்கச் செய்யவேண்டுமென்று தீர்மானம் செய்து, அனுஷ்டானத்தில் கொண்டுவர வேணுமாயும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கல்வியானது ஆண், பெண் என்ற இரு பாலார்க்கும் பொதுவானதே யாயினும் பெண் கல்வி விஷயத்தில் நம்மவர்களின் சிரத்தை மிகவும் குறைவு என்பதை 1921-ம் வருஷத்திய ஸென்ஸஸ் கணக்கு வெளியாக்குகிறது. 100 பேருக்கு ஒரு பெண்கூட எழுதப்படிக்கத் தெரியாத ஒரு ஜனமானது தேசத்தின் மதிப்பிற்குரியதா என்பதை யோசித்துப் பாருங்கள். கல்வி கற்ற பெண்கள் எந்த ஜன சமூகத்தில் குறைந்திருக்கிறார்களோ, அந்த ஜன சமூகமானது முன்னேற முடியாதென்பதை ஆக்ஷேபிக்க முடியுமா? ஒரு நாளும் முடியாதென்று திட்டமாய்ச் சொல்லுவேன்.

இல்லற தருமத்தை நடத்துவதில் ஆண் பெண் இருபாலாரும் சம பொறுப்பாளிகளா யிருப்பதைக் கருதியே மனைவியை மந்திரியாகத் தமிழ் நூல்கள் சாற்றுகின்றன. கல்வியில்லாத அமைச்சர்களால் வாழ்ந்த இராஜ்யங்களுண்டா என்பதை ஆராய்ந்து பார்ப்பீர்களானுல், இல்லை என்று சொல்ல எப்படி முன் வருவீர்களோ, அதுபோல கல்விகற்ற ஆணும் கல்வியில்லாத பெண்ணும் நடத்தும் இல்லற இராஜ்யமும் நல் வாழ்க்கையை நடத்த முடியாதென்னும் தீர்மானத்திற்கு வந்து விடுவீர்கள்.

ஆகையால் நமது சந்ததியார்களின் நல் வாழ்வை உத்தேசித்தாயினும் ஆண்களின் கல்வி விஷயத்தில் செலுத்தும் அக்கரையைப் பார்க்கினும் பெண்களின் கல்வி விஷயத்தில் பதின் மடங்கு அக்கரை செலுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இது சமயம் உங்களிடம் உயர்தரக் கல்வி விஷயமாய் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தற்கால உலக மேன்மை பெரிய உத்தியோகங்களிலும், அந்நிய நாட்டு வியாபாரத்திலும், கைத்தொழில் வல்லமைகளிலும் அடங்கி யிருப்பதை நாம் அறிவோம். இவைகளை அடைவதற்கு நமக்கு அவசியம் தேவையா யிருப்பது உயர்தரக்கல்வியே. நம்மவர்கள் வசிக்கும் முக்கிய ஊர்களில், நமக்கென்று பல ஹைஸ்கூல்கள் இருந்தும் ஒரு உயர்தரக் கல்லூரி யாவது இல்லாததினுல், உயர்தரக் கல்வியின் பூரண பயன்களையும் நம்மனோர்கள் அடைய முடியாதிருக்கிறது. இந்தக் குறையை நாம் கூடிய சீக்கிரம் நிவர்த்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இதை நிவர்த்திப்பதற்கு சகல சாதனங்களும் அமையப் பெற்றுள்ளவர்கள், நமது விருதுநகர் நாடார்களே. அவர்கள் நினைத்தால் இவ்வருடமே கல்லூரியும் ஏழை மாணவர்களுக்கு சாப்பாடு முதலிய பல சௌகரியங்களோடு கூடிய ஹாஸ்டலும் ஏற்படுத்தி விடலாமென்பது என்னுடைய நம்பிக்கை: ஆதலால் அதற்கான ஏற்பாடுகள் செய்யும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தவிர,

இப்போது நம்மவர்களால் நடத்தப் பெற்றுவரும் ஹைஸ்கூல்கள் ஒவ்வொன்றுக்கும் எவ்விதமான அன்னியோன்னியமும் ஐக்கியமும் இல்லாமல், நிர்வாகஸ்தர்கள் தனித்தனி நடத்திக் கொண்டு வருகின்றன. அவைகளை ஐக்கியத்தோடு நடத்துவதற்கு, நம்மவர்களால் நடத்தப்பெறும் எல்லா ஹைஸ்கூல், செக்கெண்டரி ஸ்கூல்களின் மானேஜர்களும், ஹெட்மாஸ்டர்களும் அடங்கிய போர்டு ஒன்று ஸ்தாபித்தால் நலமாயிருக்குமென்று நினைக்கிறேன். அதன் பலனுக நம்மவர்களால் நடத்தப்பெறும் எல்லா ஸ்கூல்களிலும், ஒரேவிதமான பாடப் புஸ்தகங்களும், பாட அட்டவணைகளும், பரீக்ஷைகளும், மற்றும் பல விஷயங்களும், ஒன்றாய் இருக்கத் தக்கதாகச் செய்து கொள்ளலாம். நாட்டின் கல்வி அபிவிர்த்திக்கு ஆஸ்தான பீடமாயுள்ள கல்வி இலாகா போர்டுகளில் மெம்பர் ஸ்தானம் வகிப்பதற்கும், அதினின்று பல சாதனங்களைப் பெறுவதற்கும் ஏதுகரமா யிருக்கும். எனவே ஷை போர்டு ஏற்படுத்தும் விஷயமாக நமது ஹைஸ்கூல்களின் மானேஜர்கள் சிரத்தை யெடுத்துக் கொள்வார்களென்று நம்புகிறேன்.

மகமை.

க்ஷத்திரிய குல சிகாமணிகளே !

நமது மகமையானது நம் ஜன சமூகத்தின் பொது நன்மைக்காக வேண்டுவது அவசியமென்றே, நம் முன்னோர்கள் தொன்று தொட்டு சட்ட திட்டங்கள் ஏற்படுத்தி,

(இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



(இ-பக்கத்தின் தொடர்.)

ஜாதிக்கும், வருப்பார்த்தும் வருப்பார்த்துமுள்ள அநிஷ்டமான பிளவுகளால் நம் தேசம் பீடிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். இந்த ஜாதி பேதத்தை ஒழிப்பதல்லாமல் வளர்க்கப்படுகிறது என்பதைச் சொல்ல நான் வருத்தப்படுகிறேன். இந்த வித்தியாசங்கள் வளர்க்கப்படாமல் உறுதியாக ஒழிக்கப்பட்டு தேசியத் தலைவர்களின் வேலையை இலேசாக்கப் பார்த்துக்கொள்ள வேண்டியது உங்களுடைய கடமையாகும். இம்மாதிரியுள்ள மகாநாடுகள் இந்த அபாயங்களை அறிந்துகொள்வதற்கும் நீங்கள் சரியான வழியில் செல்வதற்கும் உபயோகப்படுகின்றன.

நீங்கள் தடுத்துக் கொள்ளவேண்டிய மற்றொரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். உங்கள் முன்னேற்றத்திற்காகச் செய்யும் முயற்சியில் மற்ற ஜாதியாருடைய சரித்திரத்திலிருந்து காணக்கூடிய தவறுதல்களைக் கவனித்துக்கொண்டு நீங்கள் அத்தகைய தவறுதல்களுக்கிடமின்றி நடந்துகொள்ளவேண்டும். உயர்ந்த ஜாதியார்கள் என்று சொல்லப்படுபவர்களுக்குச் சமமாக உங்களை உயர்த்திக் கொள்ள முயலுவதில் அவர்களே சீர் திருத்திக்கொள்ள வேண்டியவைகளான கெட்ட சில சமுதாய ஆசாரங்களைப் பின் பற்றுகிற எண்ணம் உங்களுக்கும் ஏற்படக்கூடும். அவ்வெண்ணப்படி நடப்பீர்களானால் உங்களுடைய ஜனங்களின் பெரும் முன்னேற்றத்தைத் தடுக்கவர்களாவீர்கள். அரசாங்கம் என்னவிதமாக விரும்பினும் சமுதாய சீர்திருத்தம் உங்களுடைய கையிலேயேயிருக்கிறது. முற்கால வழக்கமென்னும் பேரால் இந்த நாளில் பாப்பப்பட்டுவரும் சமுதாயக் குறைகளை நீங்களே அறிந்து அதைத்தடுக்க முயற்சிக்க வேண்டியதேயன்றி அரசாங்கத்தை முற்றிலும் எதிர்பார்ப்பதற்கில்லை. உதாரணமாக தற்காலத்தில் சமுதாய ஆசார சீர்திருத்தங்களில் முக்கியமான தான பால்ய விவாஹத்தையும் பால்ய விதவைகளைப்பற்றியும் எடுத்துக் கொள்ளுங்கள். தனது சொந்த ஒரு ஜாதியார் முழுவதும் சேர்ந்து இதை ஒழிக்க முடியாவிடில் அரசாங்கம் என்ன செய்ய முடியும்? சமுதாய சீர் திருத்தக்காரர் எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம்.

அரசாங்கம் சீர் திருத்தத்திற்கு சட்டங்கள் செய்ய அதிகமாக விரும்பலாம். ஆனால் பலமான பொது ஜன அபிப்பிராயமில்லாவிடில் அச்சட்டங்களின் பிரயோஜனம் எத்தகையதாயிருக்கும்? இத்தகைய ஜாதிய மகாநாடுகளிலே தான் அந்த ஜாதியினரின் பொது அபிப்பிராயத்தை அறிய முடியும். ஆகையால் கனவான்களே! இத் தவறுதல்களினின்றும் நீங்கள் விலகி மற்ற வகுப்பினர்களுக்கு வழிகாட்டியாயிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

உங்களுக்கு தாழ்ந்தவர்களாக எண்ணப்படும் ஜாதியார்களுக்கு நீங்கள் செய்யவேண்டிய கடமைகளை இச்சமயத்தில் உங்களுக்கு நினைப்பூட்ட எனக்கு இடம் கொடுங்கள். தன்னுடைய சுதந்திரங்களுக்காகப் போர் புரிந்துகொண்டிருக்கும் ஒரு ஜாதியார் மற்ற ஜாதியார்களுக்கு உதவி செய்யாமலிருப்பது சாதாரணமான சம்பவமே. உங்களைவிட உயர்ந்த ஜாதியாரெனச் சொல்லப்படுபவர்கள் செய்யும் கொடுமையை நீங்கள் எதிர்த்துப் போராடுவதற்கு உபயோகிக்கும் விவாதங்களை மனதில் வைத்துக்கொண்டு உங்களுக்குத் தாழ்ந்தவர்கள் முன்னேறுவதற்குச் செய்யும் முயற்சிகளில் அனுதாபம் காட்டவேண்டும். சம உரிமை பெற முயலும் ஒரு வகுப்பினர் மற்றவர்களைத் தாழ்ந்தவர்களென நினைத்தால் அவ்வகுப்பினர் சம உரிமை பெற எவ்வித நியாயமுமில்லை.

## தேசீய முன்னேற்றம்.

உங்கள் குலத்தை சீர்திருத்தும் விஷயத்தில் நீங்கள் உங்கள் தேசியக் கடமையை மறக்கவே கூடாது. உங்கள் குல முன்னேற்றமானது உங்கள் தேசிய முன்னேற்றத்திற்கு முதற்படியாயிருக்கிறது. உங்கள் குல முன்னேற்றத்தில் நீங்கள் புகும்போது, நீங்கள் எப்போதும் தேசிய நோக்கத்தை உங்கள் மனதில் வைக்க வேண்டியது. தேசிய நோக்கமாவதென்னவெனில் உலகத்தின் மற்ற தேசங்களோடு நமது நாடு சம உரிமை பெறுவதேயாகும். இது நம்மைப் பொறுத்த முக்கிய கடமையாம். சம [illegible]

[illegible]னாலும் நாம் நம் குலாபிமானத்தைக் காட்டத் தத்தம் செய்ய வேண்டியதும் கடமையாகும்.

## தேசீய சிக்கனம்.

தேசிய முன்னேற்றத்திற்கு முக்கிய முதற் சாதனமாயிருப்பது தேசிய சிக்கனமே. பிரசித்திபெற்ற பாரத மக்களிலொருவரால் கொண்டுவரப்பட்ட கதர் கிளர்ச்சியானது தேசிய சிக்கனத்தைத் தெளிவாய் விளக்குகிறது. தலைவராகிய மகாத்மாகாந்தி கதர் இயக்கம் உண்டாக்கினதைக் காட்டிலும் வேறெவ்விதமான பெரிய நன்மையையும் இந்த நாட்டிற்குச் செய்திருக்க முடியாது. நம்மில் ஒவ்வொருவரும் இத்துறையில் முனைந்தால், ஜனங்களின் தொழிலின்மையைப் போன்ற சில விஷயங்களை சுலபமாகத் தீர்த்துக்கொள்ளலாம். ஆகையால் நாடார் குல கனவான்களே! நீங்கள் இக்கதர் இயக்கத்தை நாலா பக்கங்களிலும் ஒவ்வொரு வீட்டிலும் பரப்பும்படி துரிதப்படுத்துகிறேன். இக்கதர் இயக்கத்தின் நோக்கமென்னவெனில், கதர் கட்டுவது ராஜத்துரோகமெனக் கூறும் பொருத்தமற்ற வாதத்தை ஒதுக்கிவிட்டு, நமது கவனமின்மையாலும், ஆதரவின்மையாலும் நசித்துப் போய் க்ஷீணதசையையடைந்துவரும் நமது தேசியக் கைத்தொழில்களை உயிர்ப்பிப்பதே யாம்.

நீங்கள் கவனம் செலுத்தக்கூடிய அடுத்த முக்கியமான காரியமென்னவெனில், குடிசைத் தொழில்களை உற்சாகப்படுத்துவதேயாம். இந்தியாவானது கிராமங்கள் நிறைந்த ஒரு தேசம். தேசத்தின் செழிப்பானது முக்கியமாகக் கிராமங்களின் செல்வத்தைச் சார்ந்திருக்கிறது. உழவுத் தொழிலைத் தவிர குடிசைத் தொழில்களின் முன்னேற்றமானது உங்களுடைய கிராமத்தின் செல்வத்திற்கு இருதயம் போன்றது. தேசிய சிக்கனமானது மதுவிலக்கு விஷயத்தை எனக்கு நினைப்பூட்டுகிறது. மதுவிலக்கானது பொதுஜனங்களின் அபிப்பிராயத்தாலொழிய சட்டத்தால் மட்டும் நிவர்த்திக்க முடியாது. இது விஷயமாக நீங்கள் தீவிரக்கிளர்ச்சி ஏற்படுத்துவீர்களென்று எதிர்பார்க்கிறேன். தீண்டாமை யென்னும் விஷயமும் தேசியச் சிக்கனமென்னும் விஷயமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்த முள்ளவைகளாயிருக்கின்றன. இந்த இரண்டு விஷயங்களையும் ஒன்றாய் இணைத்துச் சொல்வது உங்களுக்கு விபரீதமாகத் தோன்றலாம். தீண்டாமை யென்னும் சமுதாய விஷயத்தை விட்டு விட்டு சிக்கன விஷயத்தை மட்டும் எடுத்துக்கொண்டு நோக்குமிடத்து, தீண்டாமையினால் ஜனத்தொகைக் குறைவேற்பட்டு எவ்வளவு தூரம் நமக்கு நஷ்டத்தை யுண்டு பண்ணுகிறதென்பதை கவனியுங்கள். தீண்டாதவர்களென்று புறக்கணிக்கப்படுகிறவர்கள் மற்றத் தேசங்களில் குடியேறுவதை நாம் பார்க்கிறோம். ஏனென்றால், அவர்கள் சமுதாய சம உரிமையின்மையால் நசுக்குறும் போது அவர்களுக்கு வேறு கதி கிடையாது. நம் தேசத்தினரில் பெரும்பாலோர் விபசாயிகளே. நிலத்தைப் பண்படுத்துவதற்கு நாம் மற்றவர்களின் உதவியையே நாட வேண்டியிருக்கிறது. அவ்வுதவி செய்வோர்களைக் காப்பாற்ற வேண்டியதும் நமது கடமையாகவிருக்கிறது. சமீபமாக நான் என் குல "இளைஞர் மகாநாட்டில்" பேசினபொழுது, தீண்டாமை யென்னும் விஷயத்தைப்பற்றி முக்கிய கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொண்டேன். நான் இதை இங்கு மறுபடியும் ஞாபகப்படுத்துகிறேன். நாம் அவர்களை ஒழுங்காய் நடத்த வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு கூலிகள் திருப்தியடைந்திருக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு எஜமானர்களின் ஊதியம் பெருகுகிறதென்பது சிக்கன முறையின் முக்கிய கோட்பாடாகும். தீண்டாமை என்னும் பாரமானது நீக்கப்படும்வரை அவர்கள் முன்னேற முடியாதென்பது நிச்சயம். ஆகையால் சீமான்களே! நமது சொற்ப ஜீவியத்திற்குள் இவ்விதப் பெரிய பாரத்தை அகற்றிவிடுவது நமது முக்கிய கடமையாகும். உண்மையாக இதை நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அனேகமாக ஜனங்கள் இக்தக் கேள்வியின் முக்கியத்தைத் தெரிய வந்துவிட்டார்கள். விசேஷமாக அனேக தலைவர்கள் இவ் விஷயத்தைச் சீர்படுத்துவதற்காக பயபக்தியுடன் வேலை செய்கிறார்கள். வழக்கத்தினின்றும் தவறாத வைதீகர்களுக்கு நாம் அவர்கள் கொண்[illegible]

[illegible]யெடுத்துக்காட்டி இத் துர்வழக்கத்தை அறவே ஒழிக்கவேண்டும். தீண்டாமை என்னும் கொடிய வியாதியால் கஷ்டப்படும் ஜனங்களுக்குப் பலவிதத்திலும் சர்க்கார் தங்களாலியன்ற உதவி செய்து வருகிறார்கள். இவர்களுக்கு அனேக சௌகரியங்கள் செய்தும், தாழ்ந்த படிப்பாயிருந்த போதிலும் உத்தியோகம் கொடுத்தும் வருகிறார்கள். கல்வி இலாகாவில் இவர்களுக்கு ஒவ்வொரு சௌகரியமும் கொடுக்கப்படுகிறது. சில வகுப்பினர்களை சமத்துவத்துடன் சேர்த்துக் கொள்ளாத பள்ளிகளுக்குக் கொடுத்துவரும் நன்கொடையை நிறுத்துவதற்காக சர்க்கார் ஏற்பாடு செய்ய முயற்சி எடுத்து வருகிறார்கள். ராஜாங்கத்தார் எல்லா சமுகத்தாருக்கும் பொதுவாக ரஸ்தாக்கள், கிணறுகள், சத்திரங்கள் ஏற்படுத்தும் திட்டங்களைச் சட்டத்தில் இணைக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

என்னுடைய பிரயாசை யாதெனில் தாழ்த்தப்பட்டவர்களென்று சொல்லப்படுகிறவர்களை ஸ்தல தாபனங்களுக்குக் கூடியவரை அங்கத்தினர்களாக நியமனம் செய்ய முயற்சி எடுத்துவருகிறேன். இன்னும் அனேக குறைகளையும் ஒழுங்கீனங்களையும் நீக்குவதற்காகத் தகுந்த உபாயங்களை ஸ்தல ஸ்தாபன மசோதாவில் சேர்ப்பதற்காக நான் எத்தனித்திருக்கின்றேன். நான் தாழ்த்தப்பட்ட குலத்தினருக்கு தாங்களே தங்கள் பிரதிநிதிகளை ஸ்தல ஸ்தாபனங்களுக்குத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரங்களைக் கொடுக்கவும் எத்தனித்திருக்கின்றேன். உண்மையாகவே ராஜாங்கத்தார் சொற்ப காலத்துக்குரிய திட்டத்தால் தாழ்த்தப்பட்ட எனது சகோதரர்களுக்கு உதவி செய்து வருகிறார்கள். நல்ல கல்வி, நல்ல சுகாதாரம், சமுதாயம், சிக்கனம் முதலியவைகளை முன்னிட்டுத் தங்களுக்குக் கொடுத்திருக்கும் சௌகரியங்களைப் பயன்படுத்தி, தாங்கள் தங்களைத்தானே அறிந்து ஒத்துக்கொண்டு மற்றக் குலத்தினருக்குச் சமமாக எழுந்திருக்கும்படி ராஜாங்கத்தார் எதிர்பார்க்கிறார்கள்.

தஞ்சை ஜில்லாவின் தாலுகாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்ய எனக்குச் சந்தர்ப்பம் நேர்ந்தது. இவைகளில் சிலவற்றில் உங்கள் குல அங்கத்தினர்கள் முக்கியமாகப் பிரதிநிதிகளாயிருந்தார்கள். உங்கள் தலைவர்களோடு நான் நெருங்கிப் பழகினேன். உங்கள் குலத்து இந்துக்கள் இந்துக்கோவிலுக்குள் போகக்கூடாதென்பது எனக்கு மிகுந்த வருத்தத்தை உண்டுபண்ணுகிறது.

இந்து மதமானது கடவுளைத்தொழும் விஷயத்தில் குலத்துக்குக் குலம் வித்தியாசம் பாராட்டாமலும் ஒரு குலத்தினருக்குள்ள பூஜைப்பாத்தியத்தைத் தவிர்த்து மற்றையோர்களுக்குச் சமத்துவம் கொடுக்கக்கூடிய யோக்கியமான மதமென்றும் நான் இதுவரை கருதியிருந்தேன். ஆனால் தஞ்சை ஜில்லாவில் நான் என்னுடைய நம்பிக்கைக்கு எதிரிடையாக விருக்கக்கண்டேன். தேவஸ்தானக் கமிட்டிக்கு உங்கள் குல அங்கத்தினர்களை நியமனஞ் செய்வதைச் சிலர் எதிர்க்கிறார்கள். இது பரிதாபகரமான நிலைமையே! நான் இதை நீக்கமுடியாதா வென்பதைப் பற்றி என்னாலானமட்டும் உழைப்பேன். உங்களில் சிலர் தேவஸ்தானக் கமிட்டி அங்கத்தினர்களாக நியமனஞ் செய்யப் பெறுவீர்களென்று நம்புகிறேன்.

இந்துமத பரிபாலன சட்டப்படி கமிட்டி மெம்பர்கள் தேர்தல் நடத்தப்படும் காலத்தில் நீங்கள் அபேட்சகராக நிற்பதற்கு எவ்விதத் தடையுமில்லை. ஆனால் உங்கள் முன்னேற்றத்தில் நியாயத்திற்கும் சட்டத்திற்கும் கட்டுப்பட்டு நடக்குமாறு கவனம் செலுத்தவேண்டும்.

மேற்படி விஷமம் நேரிடாமல் காத்துக்கொள்ள வேண்டியது உங்கள் கடமை. இந்து மதத்தைத் சேர்ந்த எல்லோரையும் தாராளமான சிந்தனையுடனும் நல்லெண்ணத்துடனும் பாராட்டும்படி நாடார்கள் அல்லாத எல்லா இந்துக்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். அன்னிய தேசத்து மன்னர்களின் படையெடுப்புக்களாலும், மதப் போராட்டங்களாலும் நசுக்கப்படாத நம்முடைய மதம் அதற்கு இடங் கொடுக்குமென்று நினைக்கிறேன். நம்முடைய பெரிய ரிஷிகள் அப்பேர்ப்பட்ட தவறான கொள்கையை கற்பித்தது கிடையாது; இந்தக் கோவில்களை உண்டாக்கினவர்களும் இப்படி நேரிடுமென்று கனவிலும் நினைத்ததில்லை. ஆகையால் நாடார்கள் கடவுளைத்[illegible]

எடுப்பதில் மற்ற இந்துக்களும் உதவி செய்யும்படி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் விபத்தான கலகம் ஏற்படவில்லை யென்று சந்தோஷப்படுகிறேன்; அதைத்தப்பித்துக்கொள்வதற்காக நீங்கள் உங்கள் சொந்தப் பணத்திலிருந்து சொந்தக் கோவில்கள் கட்டிக்கொண்டு அவைகளை நீங்களே மேற்பார்த்து வருகிறீர்கள். நீங்கள் உங்கள் கலியாணங்களையும் உங்கள் ஜாதி குருக்களை வைத்து நடத்துகிறீர்கள் என்று தெரிந்துகொண்டேன். உங்களில் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் ஒற்றுமையுடனும் சிநேகத்துடனும் வாழ்ந்து வருகிறீர்களென்றும் மதவேற்றுமை இல்லாமல் ஒருவருக்கொருவர் நேசமாயிருக்கிறீர்களென்றும் கேள்விப்பட்டு சந்தோஷப்படுகிறேன். அப்படி இருப்பதற்கு திடமும் மன உறுதியும் வேண்டும். இந்த இரண்டு மதங்களும் மதத் துவேஷமின்மையை வற்புறுத்துகின்றன; மேலும் இம்மாகாணம் பெற்ற பெரிய ஆசீர்வாதமென்ன வென்றால் இன்னொரு மத விஷயமாயும் (முகம்மதிய மதம்) நம் தேசத்தின் மற்றப்பாகங்களிற்போல மத வேற்றுமையால் சண்டையும் கலகமும் நேரிடாமல் இருப்பதே.

## உங்களின் முற்கால தற்கால நிலைமை.


ஜாதித் துவேஷத்தால் நீங்கள் கஷ்டப்பட்ட போதிலும் சில கோவிலுக்குள் மற்ற உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக்கொள்பவர்களுடன் சம உரிமையோடு நுழைந்து சுவாமி தெரிசனம் செய்வதற்கு நீங்கள் முயற்சிப்பதால் உண்டான கஷ்டம் நஷ்டம் எவ்வளவோ இருந்தபோதிலும், நீங்கள் எவ்வளவோ முன்னேறியிருக்கிறீர்கள்; உங்கள் ஜாதி நன்மைக்காக ஆங்காங்கு பொது மகமைப்பண்டுகள் சேகரித்து வருகிறீர்கள்; நாடார்கள் வாசம் செய்யும் முக்கியமான பட்டணங்களில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்திருக்கிறீர்கள்; தூத்துக்குடியில் நாடார் பாங்கு ஒன்று ஸ்தாபித்திருக்கிறீர்கள்; ஷை பாங்கு சரியாய் நடத்தப்பட்டு வருகிறதென்று நம்புகிறேன். உங்கள் விடாமுயற்சியினால் விபசாயத்தில் நீங்கள் முற்போக்கை அடைந்திருக்கிறீர்கள்; உங்கள் ஊக்கத்தினால் வியாபாரத்தில் எவ்வளவோ சிறப்பு அடைந்திருக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய முன்னேற்றத்தினால் நீங்கள் பெருமை கொள்ளக்கூடாது. உங்கள் முன்னேற்றம் சோம்பலைக் கொண்டுவராமல் பார்த்துக்கொள்ளுங்கள். முன்னேற, முன்னேறயேலும், மேலும் முன்னேற வேண்டுமென்று பிரயாசை எடுங்கள். கூட்டுறவு பாங்குகள் ஸ்தாபித்தல், தற்கால நவீன சாஸ்திர முறைகளை அனுசரித்து விவசாயத்தை விருத்தி செய்தல், வியாபாரம், கைத்தொழில் கற்பிக்கும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தல் இப்படிப்பட்ட விஷயங்களில் உங்கள் சங்கம் தலையிட்டு பால்ய நாடார்களை விருத்திக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும். எதை எடுத்தாலும் புது மாறுதல்கள் வந்து கொண்டிருக்கின்றன. பழைய முறைகளை விட்டு கைத்தொழில், விவசாயங்களில் நவீன சாஸ்திர முறைகள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன. நீங்களும் அவற்றைஒத்துப் போகவேண்டும். நீங்கள் பழைய முறைகளை விட்டுவிடுங்கள். தென்னிந்தியாவில் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் இவைகளில் முன்னேறி வரும் ஜாதிகளில் நீங்கள் முதன்மையடைவீர்களென்று நான் திண்ணமாய்ச் சொல்லுவேன். வியாபாரம், கைத்தொழில் இவைகளில் மிகுந்த சாமர்த்தியம் வாய்ந்த நீங்கள் வியாபாரத்தில் இந்தியர்கள் மற்ற தேசங்களைப் பின்னடையமாட்டார்கள் என்று பிரத்தியட்சமாய்க் காண்பிக்கவேண்டும்.

## ஜன சமுகக் கல்வி.

எல்லோரும் ஆராய்ந்து வரும் இன்னொரு விஷயத்தைப்பற்றி உங்களுக்குச் சொல்ல வருகிறேன். அதாவது பொது ஜனங்களின் கல்வியின்மையைப்பற்றி உங்களுக்குச் சொல்ல வருகிறேன். நாம் எல்லோரும் இங்கு கூடி பொது நன்மையான காரியங்களைப் பேசுவது எளிதே. ஆனால் இங்கு இல்லாத உங்கள் ஜன சமுகத்தைச் சேர்ந்த எத்தனையோ பேர்கள் இருக்கிறார்களே அவர்கள் இப்பேர்ப்பட்ட கூட்டத்தின் அவசியத்தை உணருகிறார்களா? எதையும் ஆராய்ச்சி செய்ய சக்தியுள்ளவர்களாய் இருக்கிறார்களா? ஜன சமுகக் கல்வியின்மை

Tamil Heritage Foundation International Digital Library EBook collection





சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

மேது மின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்தா வெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் திருவருளை
நினைவாகச் சிந்தை செய்வாம்.

## நாடார்குலமித்திரன்

விபவ ஞூ ஆடி மீ க௨

### மகாநாட்டின் மகிமை.

அருப்புக்கோட்டையில் நாடார் மகாஜன சங்கம் 12-வது மகாநாடு ஜூலை மீ 4, 5, 6 தேதிகளில் அதிக விமரிசையுடன் வெகு அமைதியாக யாதொரு குறைவுமின்றி நடந்ததுபற்றி மிகவும் சந்தோஷிக்கின்றோம். இதற்குமுன் நடந்த பதினொரு மகாநாடுகளுக்கெல்லாம் இப் பன்னிரண்டாவது மகாநாடு மிகவும் விசேஷித்ததென்றும், மூன்றுநாட்களிலும் வந்திருந்த பிரதிநிதிகள் வெகு உற்சாகத்துடன் மகாநாட்டின் நடவடிக்கைகளை நன்ருய்க் கவனித்து வந்தார்களென்றும், பொதுவாக இதன் மூலம் நாடார் மகாஜன சமூகத்துள் ஓர் புதிய சகாப்தம் தோன்றியிருக்குமென்றும் கூறுவது மிகையாகாது.

நீண்ட நாட்களாக நாடார் பாங்கிற்கும் நாடார் மகாஜன சங்கத்திற்கும் ஏற்பட்டிருந்த சிறு அபிப்பிராய பேதங்கள் நீங்கி ஏழை மாணவர்கள் சகாய நிதியைக் கொண்டு நாடார் பாங்கில் பங்கெடுத்துக்கொள்வதென்றும், வட்டிக்கும் போட்டு வைப்பதென்றும் தீர்மானித்திருப்பதும், மகாஜன சங்கமானது பட்டிவீரன்பட்டிக்கு மாற்றப்பட்டிருப்பதும், வைஸ் பிரஸிடென்டு, காரியதரிசிகள் பதவிகளில் மாறுதலேற்பட்டிருப்பதும், ஏழை மாணவர்கள் சகாய நிதிக்கு இன்னும் ஒரு லட்ச ரூபாய் பண்டு சேர்ப்பதற்கு புதிய உத்தியோகஸ்தர்கள் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதும் இப்பன்னிரண்டாவது மகாநாட்டின் மகிமை என்றின்புறுகின்றோம்.

நம் பாரதநாட்டின் ராஜீய மேகஞ் சூல் கொண்டிருக்கும்போதும், சர்வஜன சமூகப்பிரசினைகள் மிகச் சிக்கலாயிருக்கும்போதும், பிராமணர் பிராமணரல்லாதார் பிணக்குகள் முற்றிக் கொண்டிருக்கும் போதும் யாதொரு கலவரமுமின்றி மகாநாடு இனிது நடைபெற்றதுபற்றி இறும்பூதெய்துகின்றோம். சரித்திரமெழுதுவோர் அருப்புக்கோட்டை மகாநாட்டை வெகு சிறப்புடன் குறிப்பிடாமலிருக்க முடியாது. இம் மகாநாட்டில் நாடார் இளைஞருக்குள்ளும் சமதர்மம் உதயமாயிருப்பதுடன் சர்வஜன சகோதரத்வமும் உண்டாகியிருக்கிறது. அருப்புக்கோட்டை நகர் முழுவதுமட்டுமல்ல அதைச்சுற்றிய பற்பல கிராமங்களிலும் சம தர்ம உதயமும், சகோதரத்வமும் நவீன உணர்ச்சியும், பொது ஜன சேவையிற் பிரீதியும் எழுப்பப்பெற்றிருக்கின்றன. ஆகையால் அருப்புக்கோட்டை மகாநாட்டை வெற்றி பெற்ற மகாநாடென்று விளம்புவதுடன் மகிமையுள்ள மகாநாடென்றும் வர்ணிக்கின்றோம்.

மகாநாட்டின் தலைவர்கள் வருகையும் வரவேற்பின் அழகையும் எம்மட்டும் வர்ணிக்கலாம். அவற்றை அடுத்த பத்திகளில் காண்க. தலைவர்கள் சொற்பொழிவுகளைக் கவனிப்போம். வரவேற்புச் சேர்மன் ஸ்ரீமான் ப. உ. ஆ. சிதம்பர நாடாரவர்கள் புராதன நகரங்களி லொன்றாகிய அருப்புக்கோட்டையின் இயற்கை வனப்பை வெகு விரிவாக விளக்கிவிட்டு மற்ற விஷயங்களைச்சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்ற முறையில் சொல்லிக் கல்வியைப் பற்றிச் சிறிது விரிவாக எழுதியிருக்கின்றார். நமது ஜன சமூகத்தின் தற்கால நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து சீர்திருத்தவேண்டிய ஒரு சில விஷயங்களைப்பற்றி சொல்லாமல் விடவில்லை. ராஜீய விஷயத்திலும் தம்முடைய கருத்தின்னதென்பதையும் வாசிப்பவருக்கு விளங்கும்படி செய்திருக்கின்றார். நமது சமூக ஹோதாவில் நாமாக எதிலும் சார்ந்து வேலை செய்ய ஏதுவில்லாதபடி நமது நாட்டு நிலைமை இருந்து வருவதுபற்றி நாம் வருந்த வேண்டியவர்களாயிருக்கிறோமென்று குறிப்பிட்டிருப்பதை இதர பிரமுகர்களனைவரும் உற்று நோக்குதல் வேண்டும். இவ் வபிப்பிராயத்தைப் பன்னாட்களாய் எழுதியும் பேசியும் வந்திருக்கின்றோம். தேசாபிமானிகளென்பார் ஒரு சிறிதும் கவனிக்கவில்லை. கவனியாதவரையில் ஒரு பெரிய ஜனசமூகத்தின் உதவியைத் தேசம் இழந்துவிடுமென்பதிற் சந்தேகமில்லை. நாடார்கள் மொத்தத்தில் திடமாக ஒரு வழியில் இறங்கி வேலை செய்வதற்கு இதுவரையும் தேசிய வாதிகளின் உண்மையான அழைப்பும் ஆதரவும் இல்லாமற் போய்விட்டன. ஆயினும் தற்காலம் தோன்றியிருக்கும் சுயமரியாதை இயக்கம் நாடார்களுக்கு மட்டுமல்ல, நமது நாட்டுக்கே நலன்தரத் தக்கதாய்க் காண்பதால் நாடார்கள் அதை ஆதரிக்கலாம் என்று நம்புகின்றோம். ஆயினும் தென்னாட்டில் அவ்வியக்கம் எவ்வாறு பரவுகின்றது; அவ்வியக்கத்தை வரவேற்பவர்கள் எம்முகத்துடன் ஏற்கின்றனர் என்பதையும் நாடார்கள் எதிர்பார்த்து பரிசீலனை பண்ணக்கூடும். இயக்கம் பரிசுத்தமாயிருந்தாலும் சுயநல விஷக் கலப்பால் நசித்துப்போவதுமுண்டு. பல இயக்கங்கள் அங்ஙனமே கெட்டுப்போய்விட்டன. அவ்வாறு நேர்ந்துவிடாமல் சம தர்மத்தை வளர்ப்பிக்கும் சுயமரியாதை இயக்கத்திற்கு நாடார்கள் திரிகரண சுத்தியுடன் ஆதரவு செய்யக் கோருகின்றோம்.

மகாநாட்டின்திறப்பாளர் கனம். டாக்டர். பி. சுப்பராயன் அவர்களுடையவும் மற்றும் தலைவர்களுடையவும் பிரசங்கங்களை மற்றிடங்களில் பிரசுரித்திருக்கிறோம். இன்னும் நமதபிப்பிராயங்களைப் பற்றிப் பின்னால் எழுதுவோம்.

---

# நாடார் மகாஜன சங்கம்

# 12-வது மகாநாடு,

## அருப்புக்கோட்டை.

## ஆரம்ப வைபவமும், முதல் நாள் நடபடிக்கைகளும்.

(நமது சொந்த நிருபரிடமிருந்து)

### அக்கிராசனர் வரவேற்பு-3-7-28.

மகாநாடு கூடப் போவதுபற்றி நம் மகாஜனங்கள் ஒவ்வொருவரும் சந்தோஷத்தாண்டவமாய் வீதிகளை அலங்காரம் செய்து வைத்திருந்த காக்ஷி வெகு மாக்ஷியாயிருந்தது. வீதிகளில் தோரணங்களும், கொடிகளும், வாழை, கமுகு முதலியன நாட்டப்பட்ட பந்தர்களும், வளைவு தட்டிகளும், தலைவர்கள், பிரதிநிதிகள் முதலியவரை வரவேற்கும் போர்டுகளும், ராஜவாழ்த்துப் போர்டுகளும்,நீதிகள் பொறிக்கப்பெற்ற போர்டுகளும், மகாநாடு கூடும் கொட்டகை முன்பு நிறுத்தப்பட்டுள்ள பிரமாண்டமான கொடி மரமும் மற்றும் பல அலங்காரங்களும் கண்களைக் கவர்ந்தன. நகர் முற்றும் ஓர் புதுத் தோற்றம் கொண்டதாகிவிட்டது. விருதுநகர் மார்க்கமாகவும், மதுரை மார்க்கமாகவும் கார்கள் மூலமாய் பிரதிநிதிகள் வந்து குழுமிக்கொண்டிருந்தார்கள். பிரதிநிதிகளின் தொகை பெருகப் பெருக ஜனங்களுக்கு உண்டான ஆனந்தத்திற்களவில்லை எங்கும் மகாநாட்டுப் பேச்சே ஒலித்துக்கொண்டிருந்தது.

மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமான் வெ. கனகசபை நாடாரவர்கள் விருதுநகர் மார்க்கமாக மாலை 6½ மணிக்கு விஜயம் செய்வார்களென ஏற்கனவே கிடைத்த தகவலைக்கொண்டு அன்னவர்களை வரவேற்பதற்காக உபசரணைக்கமிட்டியார் பிரசுரம் வெளியிட்டு வெகு ஆடம்பரத்துடன் நேர்த்தியான டபிள் ஹார்ஸ் பீட்டனுடன் பாண்டு, மேளம், தாளம், வாத்தியங்கள் முழங்க, யானைகள் முன் நடத்தி ஆலவட்டம், சாமரம், கொடிகள் முதலிய ராஜ சின்னங்கள் பிடித்து வாலண்டியர் அணிவகுப்புடன் ஆயிரக்கணக்கான ஜனங்கள் திரண்டு வரச் சென்று விருதுநகர் ரஸ்தாவில் தலைவரவர்களின் வருகையை நோக்கி நின்றனர். கனம் பொதுக் காரியதரிசியவர்களும், மற்றுமிரு முக்கியஸ்தர்களும் தலைவரவர்களை விருதுநகரினின்றும் அழைத்து வருவதற்காக அழகான மோட்டார் வாகனமொன்றிலேறிப் புறப்பட்டார்கள். அன்று தலைவரவர்கள் புறப்பட்டு வந்த "திருவனந்தபுரம் எக்ஸ் பிரஸ்" ட்ரெயின் சற்று பிந்திவிட்டதால் அன்னவரின் வருகை தாமதப்பட்டுவிட்டது. இரவு சுமார் 8 மணி இருக்கும். தலைவரவர்களும், பொதுக்காரியதரிசியும் அவருடன் சென்றிருந்த முக்கியஸ்தர்களும் ஏறிவந்த அழகான கார் வந்து சேர்ந்தது. உடனே ஜனங்கள் மத்தியில் தலைவரைக்கண்ட சந்தோஷ மேலீட்டால் பெரியதோர் உற்சாகம் கிளம்பி ஆர்ப்பரித்துக்கரகோஷம் ஜே! கோஷம் செய்தார்கள். தலைவருக்கு மாலைகள் சூட்டி வரவேற்று அன்னவரை பொதுக்காரியதரிசி முதலிய முக்கியஸ்தர்களுடன் பீட்டனில் வைத்து அங்கிருந்து வெகு சம்பிரமமாக ஊர்வலம் புறப்பட்டார்கள். ஜன நெருக்கடி சாற்றத்தரமன்று. வாலண்டியர்கள் அணியணியாய் நின்று நெருக்கடியை மட்டுப்படுத்தி வந்தனர். சுமார் 3000 ஜனங்கள் வரை ஊர்வலத்தில் கலந்து வந்தனர். ஊர்வலம் வந்து கொண்டிருக்கையில் தலைவரவர்களுக்கு சங்கங்கள், பொது ஸ்தாபனங்கள், கடைகள் ஆகிய வற்றிலிருந்து பூமாலைகள் சூட்டப்பெற்றன. முக்கிய வீதிகளில் ஊர்வலம் வந்து தலைவரவர்கள் ஜாகைக்கழைத்துச் செல்லப்பட்டனர். ஜாகை வந்ததும் தலைவரவர்கள் பெருத்த கரகோஷத்தினிடைய பீட்டனைவிட்டு ஜாகை உள்ளே கண்ணியத்துடன் அழைத்துச் செல்லப்பெற்றனர்.

### திறப்பாளர் வரவேற்பு-4-7-28.

மகாநாட்டுத் தினமாகிய அன்று பிற்பகலில் மதுரை மார்க்கமாக மகாநாட்டுத் திறப்பாளர் கனம் டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் வருகிறார்களெனக் கிடைத்த தகவலைக்கொண்டு அன்னவரை வரவேற்பதற்காக உபசரணைக்கமிட்டியார் பிரசுரம் வெளியிட்டார்கள். மகாஜனங்கள் பெரிதும் ஆனந்தபரவசராய் திறப்பாளர் வருகையை எதிர்பார்த்திருந்தனர். வெளியூர் பிரதிநிதிகள் அனைவரும் அன்று பிற்பகலுக்குள் வந்து சேர்ந்து விட்டார்கள். ஜனங்களிடை களிப்புமிகுந்து பொங்கியது. திறப்பாளரை வரவேற்கப் புறப்படுவதற்குப் பிரசுரத்தில் கண்டபடி அதிர் வேட்டுகள் கிளப்பப்பட்டன. ஜனங்கள் கூடினர். பெருங் கூட்டமொடு உபசரணைக் கமிட்டியார் பாண்டு, மேளம், தாளம், வாத்தியங்கள் முழக்கி யானைகள் முன்னடத்தி, கொடிகள்,ஆலவட்டம், சாமரம் முதலியன பிடித்து வாலண்டியர் அணி வகுப்புடன் வெகு ஆடம்பரமாகச் சென்று மதுரை ரஸ்தாவில் நின்று திறப்பாளர் வருகையை எதிர்பார்த்திருந்தார்கள். மாலை சுமார் 4 மணியிருக்கும். திறப்பாளர் கனம். டாக்டர். சுப்பராயன் அவர்கள் நேர்த்தியான கார் ஒன்றில் "நாடார் மகாஜன சங்கம்" உப தலைவர் ஸ்ரீமான் வ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் எம். எல். ஸி. அவர்களுடன் இருக்கைகொண்டு வந்து சேர்ந்தார்கள். இதற்கிடையில் அன்னவரின் வருகையை எதிர் சென்றறிந்து வர முக்கியஸ்தர்கள் பலர் கார்களில் சென்றார்கள். அவர்களும் திறப்பாளருடன் வந்துசேர்ந்தனர். திறப்பாளர் வருகை யறிந்தவுடன்ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள். ஜே! கோஷமும், கரகோஷமும், வாத்திய கோஷமும் செவிடுபட முழங்கின. திறப்பாளர் தெரிசனத்திற்காக ஜனங்கள் செய்த நெருக்கடி சாற்ற முடியாது. வாலண்டியர்கள் அணி வகுப்பு கூட்டத்தை ஒழுங்கு படுத்திற்று. திறப்பாளரவர்களை கடலொலி போன்ற கரகோஷத்தினிடையே மாலைகள் சூட்டி வரவேற்றுகனப்படுத்தி கனம். அக்கிராசனரவர்களுடன் ஊர்வலமாக மகாநாடு கூடிய "பாண்டிய விலாஸ்" கொட்டகைக்கு அழைத்துச் சென்றார்கள். சுமார் 6000 ஜனங்களுக்கு மேல் ஊர்வலத்தில் கலந்திருந்தனர். கொடிகள், யானைகள் முதலியன முன் செல்ல, வாத்திய கோஷங்கள் ஒலிக்க, வாலண்டியர்கள் அணியணியாய்ச் செல்ல, திறப்பாளர் காரின் பின் முக்கியஸ்தர்கள் கார்கள் ஒன்றன் பின் ஒன்றாய் வந்து கொண்டிருக்க ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஆனந்தத்தோடு புடைசூழ்ந்து சென்ற அந்த ஊர்வலத்தின் காக்ஷி தான் என்னே! இக்காக்ஷியுடு ஊர்வலத்துடன் திறப்பாளர் அழைத்துவரப்பெற்று மகாநாடுகூடிய "பாண்டிய விலாஸ்" கொட்டகைக்குள் புகுதலும் கடலொலி நாணக் கரகோஷம் ஒலித்தது. நீண்ட கரகோஷத்தினிடையே திறப்பாளர் மேடைமீதேறி, மரியாதையுடன் மாலைகள் சூட்டப்பெற்று வெகு கம்பீரமாகத்தமது மேன்மைதங்கிய ஆசனத்தமர்ந்தார்கள்.

### கொட்டகை வனப்பு.

கொட்டகை அதிசயக் காக்ஷிக்குரித்தாய் அமைந்திருந்தது வியக்கத்தக்கதாகும். கொட்டகையின் அலங்காரம் கண்டு ஆச்சரியப்படாதாரிரார். தேவேந்திரன் கொலுவிருக்கை போன்றிருந்தது எனச் சுருங்கச் சொல்லி விடுப்பாம். பிரதிநிதிகள் உட்காருவதற்கு இருக்கைகள் வெகு நேர்த்தியாய் ஒழுங்கு செய்யப் பெற்றிருந்தன. பத்திரிகை நிருபர்களுக்குச் சௌகர்யமாகத் தனி ஆசனங்கள் ஒதுக்கி

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## ஒரு நாளில் திருமணம்.

### வீண்டம்பம் வீண்செலவுகளை ஒழிக்க வேண்டும்.

(மதுரை நாடார் ஊழியப் பிரசார சபையின் வேண்டுகோள்.)

நாடார் மகாஜனங்களே!

சில தினங்களுக்கு முன் அருப்புக்கோட்டையில் நடைபெற்ற நமது 12-வது மகாநாட்டில் நம்மால் ஏகோபித்துச்செய்யப்பட்ட தீர்மானங்களுள் "கலியாண காலங்களில் வீண் செலவுகளையும் அனுவசியமான சடங்குகளையும் நிறுத்தி ஒரு நாளில் முடிக்க வேண்டு"மென்பதே முதன்மையானதாகும். பொதுவாக எந்த ஜன சமூகத்தில், எந்த தேசத்தில் பணம் செழிப்பாக இருக்கிறதோ அதுதான் சகல வழிகளிலும் அதாவது கல்வி, வியாபாரம், கைத்தொழில், விவசாயம் முதலியவைகளில் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கக் காணலாம். நம் ஜன சமூகத்தினருக்குள் பெரும்பாலும் சம்பாதிக்கும் பணமானது தரத்துக்கு மீறிய செலவுகளின் காரணமாக தன்னையும் தன் குடும்பத்தையுங்கூட காப்பாற்றிக்கொள்ளப் போதுமானதாக இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் நம் ஜன சமூகத்தின் க்ஷேமத்தையும், தேசத்தின் முற்போக்கையும் எவ்விதம் கவனிக்க முடியும்? தற்காலம் பணமின்றி எந்தக் காரியத்தையும் சாதிக்கமுடியாது. உலகம் பூராவும் அப்பணத்தை நோக்கியே துரிதமாக ஓடிக்கொண்டிருக்கிறது. அதைப்போன்றுநம்ஜனசமூகமும் எந்த எந்த வழிகளில் பணத்தைச் சிக்கனம் செய்யலாம் என்று கவனம் செலுத்துங்கால் நம் கலியாண காலங்களில் அனுவசியமான சடங்குகளின் காரணமாய் ஏராளமான பணத்தை வீண் விரயஞ் செய்து கொண்டிருக்கிறோமென்பதை நாம் இப்போது தெளிவாகத் தெரிந்து கொண்டோம். நன்ருய் கணக்கிட்டுப் பார்ப்போமாயின் வருஷத்தில் 25 லக்ஷம் ரூபாய்கள் கலியாண அனுவசியச் செலவாய் மட்டும் ஜன சமூகத்தை விட்டுப்போய்க் கொண்டிருக்கின்றன. இதை இன்னும் 10 வருடங்கள் நீடிக்கப்பார்த்துக் கொண்டிருப்போமாயின் 2½ கோடி ரூபாய் நம்மைவிட்டுப்போய்விடும். இதைப் பற்றி யாம் பராமுகமாயிருத்தல்கூடாது. அப்படியிருத்தல் நம் ஜன சமூக முன்னேற்றத்தின் உயிர் நிலைக்கு உலைவைப்பதாகும். நாம் எடுத்துக்கொள்ளும் சிக்கனத்தின் மூலம் கோடிக்கணக்கான பணம் நம் ஜன சமூகத்தில் பரவி இருந்தால் அவ்வளவும் கல்வி, கைத்தொழில் வியாபாரம், விவசாயம் முதலியவைகளை முன்னேற்றமடையச் செய்ய உதவியாக நம்மை நடத்திக் கொண்டிருக்கும். உலகத்தில் சகல வழிகளிலும் தலை சிறந்து விளங்கும் ஆங்கிலக் கம்பெனிகளும், அரசாங்கமும், சிக்கனம், சிக்கனம் என்று சிக்கனம் செய்து கொண்டிருக்கும் போது நம் நாடார் ஜன சமூகத்தினர் சிக்கன விஷயத்தில் பராமுகமாக விருப்பது பேராபத்தை விளைவிக்கக் கூடியதாக விருக்கிறது. கல்யாண காலங்களில் மட்டுமல்ல, இன்னும், நன்மை, தின்மை சுப அசுப காரியங்களிலும் ஆலய வழிபாடுகளிலும் சரத்ஸதமீறிச் செலவிட்டு டாம்பீக வாழ்வில்லீடுபட்டு பின்னுல் தெய்வங்களின் மேல் பழி சுமத்தி சதாவும் கவலைப்பட்டு கஷ்டமடைந்து கொண்டிருக்கிறார்கள். வெண்ணெய்யைக் கையில் வைத்துக்கொண்டு நெய்க்கு ஏன் அழ வேண்டும்? நமக்கு அத்தியாவசியமாக வேண்டியவைகளை மட்டும் வைத்துக்கொண்டு அனுவசியமானவைகளை ஒழித்து விடுவோமாயின் அதுவே நம்மை சந்தோஷமாகவும் க்ஷேமமாகவும் வாழச் செய்வதற்கு அனுகூலமாகவும் பணத்தை மிச்சப்படுத்துவதற்கோர் முக்கிய சாதனமாகவும் இருக்குமென்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. பணம் நம் ஒவ்வொருவரிடமும் மிகுந்திருந்தால் அதைக்கொண்டு நாம் என்ன என்ன நூதனகாரியங்கள் செய்யலாம்; எவ்விதம் ஏராளமான பணம் சம்பாதிக்கலாம்; எவ்விதம் நம்ஜன சமூகத்தை முன்னேற்றமடையச் செய்யலாம்; எவ்விதம் கல்வி, கைத்தொழில், வியாபாரம், விவசாயம் முதலியவைகளை அபிவிர்த்தியடையச் செய்யலாம் என்றும் இன்னும் முக்கியமான காரியங்களையும் ஆலோசனை செய்து அவற்றிற்கான வழிகளில் பிரவேசித்து நம் ஜன சமூகம் உன்னத நிலைமையை அடையச் செய்யலாம். "பொருளிலார்க்கிவ்வுலகமில்லை" என்ற ஆன்றோர் உரைப்படி பணம் இல்லாமல் எந்தக் காரியமும் நடப்பதற்கில்லை. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்று பொது ஜனங்கள் சொல்லிக் கொள்வதில் அவன் என்பது பணம் என்று தான் தற்காலம் பொருள் கொள்தல் அறிவுடைமையாகும். மனிதன் பிறந்தது தன்னையும், தன் குடும்பத்தையும் காப்பாற்றுவதற்காக மட்டுமல்ல, அத்துடன் தன் ஜன சமூகத்தின் க்ஷேமத்தையும் தேசத்தின் க்ஷேமத்தையும் கைக்கொண்டுழைக்க கடமைப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொருவரும் மிச்சப்படுத்தும் பணத்தால் தானும் தன் குடும்பமும் க்ஷேமமடைவது மட்டுமல்ல, அதனுல் தன் ஜன சமூகமும் தேசமும் க்ஷேமமடைவதற்கு அனுகூலங்கள் ஏற்படக் கூடியதாக இருக்கிறது. கலியாணத்தில் ஒரு நாளைக்கு மேல் நடக்கும் காரியங்களெல்லாம் ஆடம்பரமான விசேஷச்செலவுகளையும் அனுவசியமான சடங்குகளையும் கொண்டதாக இருக்கின்றன. நமக்குக் காரியம் ஒன்றுதான் குறி. ஒரேநாளில்திருமணத்தைப்பூர்த்தி செய்து சிக்கனத்தைக் கைக்கொண்டு அனுவசியமான சடங்குகளையும் அவற்ருல் ஏற்படும் பண விரயங்களையும் ஒதுக்கித் தள்ளி, இதனுல் ஏற்படும் நன்மைகளையும், பண மிச்சத்தையும் அடைந்து முன்னேற்றமடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

---

வைக்கப்பட்டிருந்தன. கொட்டகையில் காற்ருேட்டத்திற்கு ஒரு சிறிது குறைவுமில்லை. சுகாதார முறைக்கேற்பவும், அலங்காரத்தோற்றமாகவும் அமைந்த அக்கொட்டகையின் கால்களில் நூற்றுக்கணக்கான நீதி வாக்கியப்போர்டுகள் தொங்கவிடப்பட்டிருந்தன. நீதி வாக்கியங்களில் தேசிய மயமே சிறந்து விளங்கியது. பிரதிநிதிகள் சுமார் 3000 பேர்கள் வந்திருந்தார்கள். வாலண்டியர்கள் அங்குமிங்கும் ஓடி சுறு சுறுப்பாய் வேலை செய்து கொண்டிருந்தது ஒரு புறம் பெருமை.

**நடவடிக்கைகள்—4—7—28.**

மகாநாடு சரியாய் 5-மணிக்கு ஆரம்பமாயிற்று. மகா நாட்டிற்கு விஜயம் செய்திருந்த பிரமுகர்களில் முக்கியமாக டாக்டர். சுப்பராயன், ஸ்ரீமான்களான கனகசபை நாடார், ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார், எம். எல். ஸி, மாணிக்கவேலுநாடார், பி. டி. ராஜன் எம். எல். ஸி., ஈ. வெ. இராமசாமி நாயக்கர், ஆர். எஸ். நாயுடு, டி. வி. கிருஷ்ணசாமி முதலியார், ஒயிட், அமெரிக்கன் மிஷன், அருப்புக்கோட்டை, எம். எஸ். பி. செந்திக்குமார நாடார், வி. சண்முக நாடார், நீலகிரி ஞான ஆனந்தசுவாமி, சிவசுப்பிரமணிய முதலியார், வீரபத்திரன் செட்டியார், டாக்டர் பாண்டியன், பாங்கர் வீரையாசெட்டியார் சோமசுந்தரஞ் செட்டியார், மல்லையா செட்டியார், வெங்கிடசாமி நாயுடு, குழந்தைவேலு முதலியார், கோவிந்தப்ப நாயக்கர், கருப்பையா செட்டியார், ஷண்முகநாடார், ஸ்ரீநிவாசலு நாயுடு, ராமாநுஜ ஐயங்கார், அருப்புக் கோட்டை. மாஜிஸ்திரேட்டு, ப. வ. சோமசுந்தர நாடார்; மதுரை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி உப காரியதரிசி ராஜா ராமசந்திரன் சேர்வை, முத்துச்சாமி நாடார், மீனுக்ஷி சுந்தரமையர், டாக்டர் வெங்கிட்டராமையர், சுப்பிரமணியம், தவ. ராமலிங்கம், சுந்தர மகாலிங்கம் முதலியவர்களும்,சென்னை, கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய இடங்களிலிருந்தும் இன்னும் சுற்றுப்புறங்களிலிருந்தும் வந்த கனவான்களும் பந்தலில் கூடியிருந்தனர்.

கடவுள் வாழ்த்திற்குப் பின் ஸ்ரீ வெ. கனகசபை நாடாரவர்கள் பிரரேபிக்க ஸ்ரீ ஊ. பு. அ. சௌந்தர பாண்டிய நாடார் அவர்கள்ஆமோதிக்கஸ்ரீடாக்டர் பி. சுப்பராயன் அவர்கள்நீண்ட கரகோஷத்தினிடையேஎழுந்துமகாநாட்டைத் திறந்து வைத்து தமிழில் நீண்டதோர் பிரசங்கம் செய்தார்.

வரவேற்புப் பிரசங்கம் முடிந்ததும் ஸ்ரீ வெ. கனகசபை நாடார் அவர்கள் அக்கிராசனப் பிரசங்கத்தை வாசித்தார். பின்பு முக்கியஸ்தர்களுக்கு மாலைகள் சூட்டியதும் அன்றைய மகாநாடு கலைந்தது.

---



ஸ்ரீமான் ப. உ. ஆ. சிதம்பர நாடார் அவர்கள்,
உபசாரணைக்கமிட்டிச் சேர்மன்,
நாடார் 12-வது மகாநாடு.

---

## ஆலயப் பிரவேசம்.

தமிழரச குல குழாங்காள்! நமது பழந்தமிழ் நாடாகிய, சேர—சோழ—பாண்டிநாடுகளில் ஓர் சில் ஆலயங்களில் மாத்திரம் பிரவேச உரிமை பெறுதிருப்பது, தமிழ் மாகாணத்தின் தலை நகராகிய, சென்னை ஸெயிண்ட் ஜார்ஜ் கோட்டையின் மேலவாசலாகிய வாலாஜிவாசலை, வாலாஜிசாகிப் வந்து திறந்தாலல்லாது, திறவாதுபோலநாமும்நமதுஆலயவாசல்களை நம்மின் மூதாதையர் வந்து திறந்தாலல்லது திறவாதுபோலும். நமது மதியின் கதிதான் என்னே!

முத்தமிழ் நாடுகளில், சேரநாட்டின் ஆலய சுதந்திர சக்கரமானது, அந்நாட்டினரால் ஆதரித்து ஆட்டிவைக்கப் பட்டொளிர்கின்றது. சோழநாட்டின் சுதந்திர சக்கரம், எப்பொழுதும் சுழன்று கொண்டே யிருக்கின்றது. பாண்டியநாட்டின் சுதந்திர சக்கரமானது பாழ்பட்டிருப்பது, நமது மகாஜன சங்கத்தின்சிரத்தையையோ, அல்லது நமது குல வாலிப சிங்கங்களின் திறத்தையோ காட்டுகிறதன்றி வேறென்னென்று புகல்வது? 27-12-27-ல் சென்னையில் கூடிய அகில இந்திய காங்கிரஸிற்கு, விஜயமாயிருந்த நமதபிமானிகளின் ஆலயப் பிரவேச ஆவேசமானது அம்மட்டோடே நின்றது போலும்.

கால சக்கரமோ நமக்குத் தாராள ஊக்கமளிக்கின்றது. ராஜீய வானத்தில் தேவஸ்தான மசோதாபோன்ற மின்னல்கள், பளீர்-பளீரென நம் பக்கம் ஒளிர்கின்றது. தேசிய தென்றல் நம்மீது வீசி வர வேற்கின்ற இந்நற்காலம் நமது ஜாதீய ஜோதி பிரகாசித்தாலல்லது எங்ஙனம் தமிழகத்தாய் அகமகிழ்ந்து நம்மை யாதரிப்பாள்? தமிழகத்தாயின் பிள்ளைகள் வெறும் சொள்ளைகளென பிறர் விள்ளாதிருக்க, நமது தீர வீரச் செயல்களை உலகிற்குச் சீர்தூக்கி காட்டும் காலம் இதுவல்லவா?

அசோகன் ஆட்சியிலும் ஆட்படா இத்தமிழகம், இன்று அதன் ஆலய நிர்வாகம் சரியாய் ஆள்வாரற்று அலட்சியமாயிருப்பது அந்தோ பரிதாபம்! பரிதாபம்!!

பாரதபுத்திர தீரத்தமிழரச குல குழாங்காள்! நமது ஜாதீய ஜோதியைப் பிரகாசிக்கச் செய்து, தமிழகத்தின் தவ புத்திரராய் தாய்நாட்டுச் சேவை செய்து தக்க விருதுபெறத் தாமதமேன்? இன்று முதல் தங்கள் தங்கள் நோக்கங்களை பத்திரிகைகள் மூலமாய் பிரசுரித்து தளராத ஊக்கத்துடனும் உறுதியுடனும் உற்சாகமாய் ஒவ்வொருவரும் முன் வந்துழைத்து முன்னேறி வெற்றியடைவோமாக.

எஸ். எஸ். நாடன்,
கோட்டை.

---

## விண்ணுற்ருர் !

ஆண்டிபட்டி நாடார் குல திலகரும், பரோபகாரியும், பிர பல வர்த்தகரும், ஒன்பது வருஷ காலம் யூனியன்போர்டு மெம்பர் ஸ்தானத்திலிருந்து இவ்வருஷம் யூனியன் போர்டு பிரஸிடெண்ட் ஸ்தானம் கிடைக்கக்கூடிய தருவாயிலிருந்த வருமான ஸ்ரீமான் ஏ. பெ. சிவசங்கு நாடார் அவர்கள் இரண்டு தினங்களாகசரீர சௌக்கியமில்லாமல்இருந்து 9-7-28-ல் மாலை 5-மணிக்கு தமது 60-வது வயதில் இம்மண்ணுலகைவிட்டு விண்ணுலகேகினுர். இப்பெரியாரின் பிரிவாற்ருமைக்காக வருந்தும் அவர் குடும்பத்தாருக்கும் ஷையூர் வாசிகள் அனைவோருக்கும் ஆறுதலளிக்க எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன் என்று ஸ்ரீமான் வி. அ. சு. சிவமுருகநாடார் எழுதுகிருர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யே [illegible] யிருக்கிறது; சென்ஸஸ் ரிப்போர்ட்டிலே வாசித்தவர்களுக்கு நம் தேசத்தார்களில் முக்காலே மூன்று வீசம் பேர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களா யிருக்கிறார்கள் என்று தெரியும். உங்கள் ஜாதியை எடுத்துக் கொண்டால் நூற்றுக்கு எத்தனை பேர்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள்? கவர்ன்மெண்டில் முக்கியமான மெம்பராய் இருப்பதால் மேற்படி விஷயத்தில் சிரத்தை எடுத்து வருகிறேன். ஆனால் எல்லா ஜாதிகளின் ஒத்துழைப்பில்லாவிடில் கவர்ன்மெண்டு என்ன செய்யக்கூடும்? நீங்கள் மேற்படி விஷயமாய் என்ன செய்திருக்கிறீர்கள்? என்று உங்களைக் கேட்கிறேன். உத்தியோகப் பற்றில்லாதவர்களின் உதவி, ஜன சமூகக் கல்வி விஷயமாய்த் தான் முக்கியமாய் வேண்டும். மேற்படி நல்ல விஷயத்துக்கு நாடார் ஜன சமூகத்தில் பணமாவது ஆளாவது இல்லை யென்று சொல்ல முடியாது. என் முன்பு சூழ்ந்திருக்கும் உங்கள் ஜாதியிலுள்ள தனவந்தர்கள் தங்கள் ஜாதிக்குமாத்திரமல்ல நம் தேசத்துக்கும் நன்மை உண்டாகும் படியாய் வேலை செய்வார்கள் என்று நம்புகிறேன். இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர் முதலிய நாலு ஜில்லாக்களுக்கும் இடைக் கிடையே இருக்கும் சொற்பப் பள்ளிக்கூடங்கள் போதாது. உங்கள் ஜாதியில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் தொகையைக் குறைக்க நீங்கள் ஏற்பாடு செய்யாவிடில் நீங்களே வெட்கப்பட வேண்டியது வரும். ஆனால் அது ஒரு நாளையில் முடிக்கக்கூடிய காரியமல்ல. ஆனால் சென்ற ஸென்ஸஸ் ரிப்போர்ட்டுக்குப் பின்பு இது விஷயமாய் எவ்வளவு முன்னடைந்திருக்கிறீர்கள்? இவ்விஷயத்தை இந்தக் கான்பரன்ஸில் ஆராய்வதோடு ஒவ்வொரு வருஷமும் நீங்கள் கூடும் போது ஜன சமூகக் கல்வியை முக்கியமான விஷயமாக எடுத்துக்கொள்ள வேண்டும். மற்ற ஜாதியார்கள் உங்களை லட்சியப்படுத்துகிறதில்லை என்பதைப்பற்றி வருத்தபடாமல் உங்களில் தலைவர்கள் கல்வியின்மையை அகற்றிவிட ஏற்பாடு செய்வார்களானால் மற்ற ஜாதியார்கள் தாங்களே நீங்கள் சொல்லாமலே உங்களை லட்சியப் படுத்துவார்கள். கல்வி மந்திரி ஹோதாவில் அல்ல, ஒரு இந்தியன் இன்னொரு இந்தியனுக்குச் சொல்வது போல், இவ்விஷயத்தில் நீங்கள் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உங்களை விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறேன். இவ்விஷயமாய் அடுத்த கான்பரன்ஸ் நடக்கு முன் எவ்வளவோ செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

## பெண் கல்வி.

ஜன சமூகக் கல்வியைப்பற்றி அதிக நேரம் பேசி விட்டேன். இனி மேல் பெண் கல்வியைப்பற்றி கொஞ்சம் சொல்லுகிறேன். பெண் கல்வியை எடுத்துக் கொண்டால் நாம் மிகுந்த கேவல நிலைமையிலிருக்கிறோம். அரைவாசிப் பேர்கள் கல்வி யில்லாதவர்களா யிருக்கும் ஒரு ஜன சமூகம் நாகரீகமுள்ளதென்று சொல்ல முடியாது. நான் ஆங்கிலக் கல்வியைப் பற்றிப் பேசவில்லை. நம் சொந்த பாஷையைப்பற்றி ஏதாவது தெரியுமா? எத்தனை பெண்களுக்கு நம் புராணங்களையும் இதிகாசங்களையும் வாசிக்கத் தெரியும்? மனுஷனை வாழ வைப்பதும் பெண்களே, தாழவைப்பதும் பெண்களே. பெண் வாசிக்கத் தெரியாதவளாயும் அறிவில்லாதவளாயும் மனுஷன் செய்யும் காரியங்களை அறிய முடியாதவளாயும் இருப்பின் மனுஷன் முன்னேற்றத்துக்கு அது எவ்வளவு தடையா யிருக்கும்? பெண்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களா யிருந்தால் சும்மா விருக்கும் நேரத்தில் என்ன செய்வார்கள்? தாய் பாஷையே அறியாதவர்களா யிருப்பின் நமக்கு அவர்கள் எவ்வளவோ பீடையாக விருப்பார்கள். அவர்கள் வாசிக்கத் தெரியாதவர்களாய் இருந்தால் எப்படி நாகரீகமுள்ளவர்களாவார்கள்? நம்மைப் போல் அவர்கள் கல்வியில் தேர்ச்சி யில்லாமலிருந்தால் நாம் முன்னேற முடியாது. ஆனால் உங்கள் சங்கம் பெண் கல்வியைக் கவனிக்கவில்லை யென்று வருத்தப்படுகிறேன். ஒன்று இரண்டு பெண் பாடசாலைகள் வைத் [illegible] போதுமா? [illegible] சகோதரர்கள் பெண் கல்வியில் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள்; அவர்களில் ஆணும் பெண்ணும் அதிகமாய்க் கல்வி கற்று வருகிறார்கள். நம் பெண்களை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதா என்று சந்தேகமும் இருக்கக் கூடாது. பழைய மாமூல்களும் துவேஷமும் பெண் கல்வி விஷயமாய் குறைந்து வருவதைப்பற்றிப் பாராட்டுகிறேன்.

நாடார் சமூகத்தார் பால்ய விவாகத்தை அனுசரியாததைப்பற்றி எனக்கு மிகவும் திருப்தி. இது விஷயமாய்ப் பத்திரிகைகளில் விஸ்தாரமாய் வாசித்து வரலாம். நாடார் சமூகத்தில் பால்ய விவாகம் இல்லாததைப்பற்றி நீங்கள் பெருமைடைய சந்தர்ப்பம் இருக்கிறது. உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக் கொள்ளுகிறார்களே அவர்கள் வகுப்பில் மாத்திரம் இப்பாகங்களில் பால்ய விவாகம் இருந்து வருவதால் அதைப்பற்றி அதிகமாய்ப் பேச வேண்டியதில்லை.

இச்சமயத்தில் விதவை கலியாணத்தைப்பற்றியும் விதவைகளின் கஷ்டங்களைப்பற்றியும் உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன். நீங்கள் இதைப்பற்றி ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த ஆசார சீர் திருத்தத்தை ஒவ்வொரு ஜாதியும் தனித் தனியே எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் கான்பரன்ஸிலும் இதைப்பற்றி ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவீர்களென்று எதிர் பார்க்கிறேன்.

## கிராமப் புனருத்தாரணம்.

கிராம அபிவிருத்தியைப்பற்றி நான் கொஞ்சம் சொல்லுகிறேன். கிராம விர்த்தி கிராம சுகாதாரம் என்ற விஷயங்களைப்பற்றி நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். அவைகளை நாம் முக்கியமாய்க்கவனிக்கவேண்டும். கிராமம் முன்னடைந்து விட்டால் இந்தியா முழுதும் முன்டைந்தது போல் எண்ணலாம்.

தேசத்தின் பாரம்பரையும் அயல் தேசத்தினரின் கவனமுமே நம்முடைய தேயத்தின் கிராமப் பகுதிக்கு ஆதாரமா யிருக்கின்றன. கடந்த மாரி காலத்தில் அமெரிக்க ஆசிரியர் ஒருவரால் நம்முடைய கிராமங்கள் சுகாதாரமற்ற குழிகளென எழுதப்பட்டிருந்த பிரசுரம் வெளிவந்த போது நாம் அடைந்த திகிலைக் குறித்து நீங்கள் எல்லோரும் நினைவுகூறுவீர்கள். கிராமங்களை அப்படிச்சொல்வது பொய்யாக உண்மைக்கு மாறாக சொல்லப்பட்ட கட்டுரை என்றே சொல்வேன். ஆனால் நாம் வாஸ்தவமாகவே காண்கிறது என்ன? நம்முடைய கிராமங்கள் தற்கால நவீன சுகாதார முறைப்படியிருக்கின்றனவா?

என்னுடைய சுற்றுப் பிரயாணங்களில் அதிக ஆவலுடனே கிராமங்களைக் கவனித்து கிராம வாசிகளின் ஜீவியத்தைப் பார்த்தபொழுது அனேக காரியங்கள் சீர் திருத்தப்பட வேண்டியதா யிருக்கக்கண்டேன். அதற்காகப் பரிதபித்தேன். சுகாதாரக் குறைவு நம்முடைய கிராமங்களின் முக்கிய சாபம். அதுவே வியாதிகள் நம் கிராமங்களில் துவங்க ஆதாரமாயுள்ளது. ஆகையினால் நம்முடைய கிராம ஜீவிய வழக்க பழக்கங்களில் முழு மாறுதலை உண்டாக்கி சுகாதாரம் நல்ல தண்ணீர் முதலிய வசதிகளை ஏற்படுத்தி வியாதிகளை அறவே யொழிக்க நாம் விடா முயற்சியோடு உழைப்போமாக. வாலிபர்கள் உழைக்க வேண்டிய இடம் இதுவே. கிராம வாசிகளின் பிழைப்பைக் கருதுவது உங்கள் குலத்தவரில் கல்வியை அணிகலமாக அணிந்து கொண்டவர்களே செய்ய வேண்டிய கடமை. உங்கள் சங்கத்தின் ஊழியமும் உங்கள் சமுதாயம் அல்லது மகமையின் செல்வமும் முழுதும் இக் காரியத்திலேயே செலுத்தப்பட வேண்டும்.

கிராம வாசிகளின் பிழைப்பின் அபிவிருத்திக்காக காருண்ய கவர்ன்மெண்டார் என்ன ஏதுகரம் அளிக்கின்றனர்? என்று நீங்கள் என்னைக் கேட்கலாம். ஒரு வேளை அரசியலானது ஒருவர் எதிர் பார்க்கிறதுபோல அவ்வளவு விமரிசையாய் இயங்குகிறதில்லை. ஆனால் சுதேச சமயம் தன்னுடைய பிரஜைகளைப்பற்றி அசட்டையா யிருக்கவுமில்லை. கிராமத்தின் அபிவிருத்தி விசேஷமாய்க் கவனிக்கப்பட்டு வருஷாந்திரப் பண உதவி செய்து ஒவ்வொரு வருஷமும் புது கிராம ரஸ்தாக்கள் உண்டாக்கப்பட்டு வருவதினால் ஏறக்குறைய எல்லா ஜில்லாக்களிலும் இவ்விஷயத்தில் அதிக விருத்தி உண்டாக்கப்பட்டிருப்பதைப் பார்த்து நான் [illegible] முக்கிய காரியமானது கிராம வைத்திய சாலைகள் ஏற்படுத்துதலே. கிராமங்களுக்கு மிகச் சமீபமாக அனேக வைத்திய சாலைகள் ஏற்படுத்துவது கொஞ்சக்காலம் தீர்மானத்துக்குக் கொண்டு வரப் படாமலிருந்தது. வைத்தியசாலைகளைச் சுற்றிப் பார்க்க ஏற்படுத்தப்பட்டிருந்த "டிஸ்பென்ஸரி டாக்டர் ஸிஸ்டம்" சரியானபடி வேலை செய்யத் தவறினபோதிலும், கவர்ன்மென்ட்டாரின் பண உதவியினால் வைத்தியர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசை கடந்த மூன்று வருஷ காலமாக நல்ல பலனைத் தந்திருக்கிறது. நாம் சாதாரணமாக அறிந்தபடி நம்முடைய பட்டணங்களில் வேலை கிடையாமல் அலைகிற இங்கிலீஷ் வைத்தியம் படித்தவர்களுள் அனகருக்கு அது வேலை கொடுக்கிறது. நமது மாகாணத்தில் 238-வைத்திய சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் 67 வைத்தியசாலைகளை இவ்வருஷத்தில் ஏற்படுத்த ஏதுகரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. கிராம சுகாதார விஷயமாக ஒவ்வொரு ஜில்லாவிலும், தொத்து வியாதிகளைத் தடுக்கத் தேர்ந்த வைத்திய நிபுணர்கள் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சுகாதார விஷயமாக கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு சமயோசிதம் போல் யோசனை கூறவோ அல்லது அவர்களை அவர்களுடைய வேலையில் துரிதப்படுத்தவோ கைதேர்ந்த ஒரு சுகாதார உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ஒவ்வொரு ஜில்லா சுகாதார மேல் உத்தியோகஸ்தருக்கும் உதவி புரியும்படி ஒவ்வொரு தாலுகாவுக்கும் ஒருவராக அனேக சுகாதார இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். தற்சமயம் நம் ராஜதானியில் 287 சுகாதார இன்ஸ்பெக்டர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். மேற் கூறப்பட்ட கைதேர்ந்த சுகாதார மேல் உத்தியோகஸ்தர்களுக்கும் இன்ஸ்பெக்டர்களும் நாட்டுப்புறத்தின் சுகாதாரத்துக்கானவைகளை விருத்திபண்ணவும் கிராமங்களிலுள்ள சுகாதாரத்தை நிர்வகிக்கவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். நகரங்களுக்கு தனிமையான சுகாதார மேல் உத்தியோகஸ்தர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கனவான்களே! கவர்ன்மென்ட் நமக்காகச் செய்திருக்கிறதும், செய்து கொண்டிருக்கிறதுமே கிராம வாசிகளின் கதியை அபிவிருத்திபண்ணப் போதாதா யிருக்கின்றன; ஆனால் காருண்ய கவர்ன்மென்ட்டாலது, பரோபகார சிந்தையுடன் முன் வந்து கவர்ன்மென்ட் செய்ய முயற்சிக்கும் வேலையின் உரிமையை ஏற்றுக்கொள்ள வழி காட்ட மாத்திரம் கூடும். பரோபகார சிந்தை, உதாரணமாக அனேக வைத்தியசாலைகளை உண்டாக்குகிறது. ஒரு ஊரில் தண்ணீர் சௌகரியங்களை விருத்திசெய்கிறது. அனேக பள்ளிக்கூடங்களைத் திறக்கிறது. ஜன சமூக சுகாதாரத்திற்கு உதவி புரியும் பரோபகாரிகளை, தற்காலம் ஆங்காங்கு ஏற்பட்டிருக்கும் வருஷாந்திர சுகாதார வேலைச்சங்கம் ஆவலொடு எதிர்பார்க்கிறது. கடந்த வருஷம் குழந்தைகள் சுகாதார உற்சவ விஷயமாக ஜனங்கள் அதிகப் பிரியம் காண்பித்து, தங்கள் இஷ்ட விஷயமாய் சுமார் ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் வசூல் செய்து கொடுத்ததைப் பார்க்கும் போது பிரீதியைக்கொடுக்கின்றது. அச்சமயத்தில் ஒவ்வொரு கிராமமும் அவ்வுற்சவத்திற்குத் தன்னை அதிகமாய்ச் சுத்திகரித்துக்கொண்டது.

பஞ்சாயத்து விஷயமாக, பஞ்சாயத்தின் இயக்கத்திற்கு அதிக பலம் கொடுக்கப்பட்டு, அனேக பஞ்சாயத்துகள் ஏற்படுத்தபட்டிருக்கின்றன. பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களும் கிராம வாசகசாலைகளும் நியமிக்க கவர்ன்மென்ட் பணஉதவி செய்கிறது. ஆனால் சில பஞ்சாயத்துகள்சரியானபடி வேலை செய்யாததைக் குறித்து அதிகமாய் விசனிக்கிறேன். தற்கால சட்டம் அனேக விஷயங்களில் குறைவுகளை உடைத்தா யிருக்கிறதென்று எனக்குத் தெரியும். ஆகையினாலே எனது அனுபோகத்திலிருந்து நான் அறிந்து கொண்ட விஷயங்களடங்கிய விரிவான ஒரு சட்டம் சட்ட புஸ்தகத்தில் நிர்வகிக்க யோசிக்கிறேன். நாட்டுப்புறத்தின் நிலைமைகளைத் திருத்த முயலும் போதே சன்மார்க்கத்திற் குரியவைகளையும் நாம் மறக்கிறதில்லை. 1924-ம்வருஷம் வடக்கேயுள்ள ஓர் ஸ்தல ஸ்தாபனம் சுகாதார இலாகா குடியை அகற்ற வேலை செய்ய வேண்டுமென்று தீர்மானம் செய்ததை நம்மில் அனேகர் [illegible] பிறகு பொது சுகா [illegible] அதன் தீமையைப்பற்றியும் பிரசங்கம் செய்ய அனுமதி கொடுக்கலாமா? என்னும் கேள்வி வந்தது. அதனால் கவர்ன்மென்ட் தன்னுடைய வேலையாட்கள் இப்பேர்க்கொத்த வேலை செய்யக்கூடாதென்று தீர்மானித்துவிட்டது. ஆனால் அச்சட்டம் பின்னால் ரத்துசெய்யப்பட்டது. சுகாதார உத்தியோகஸ்தர்கள் இப்பொழுது மதுவிலக்குப் பிரசாரம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டிருப்பதை நினைத்து மிகுந்த குதூகலம் அடைகிறேன்.

## வாலிபர் இயக்கம்.

கிராமச் சீர்திருத்தத்தை முன்னிட்டு கவர்ன்மென்ட்டார் செய்திருக்கிறவைகளையும் செய்யப் பிரயாசை எடுத்துக் கொண்டிருக்கிறவைகளையும் நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். நாம் இப்பொழுது அடையும்படி அவாக் கொண்டிருக்கும் வெற்றியை அடைவதில் நீங்கள் எல்லாரும் ஒத்துழைக்க வேண்டியது உங்கள் பேரில் விழுந்த பெருங் கடமை. இதில் உங்கள் குல வாலிபரிடத்தில் அக்கடமையைப் பொறுப்புக்கட்டி வைப்பதைத் தவிர வேறு செய்ய முடியாது. இந்த வேலைக்கு நாடார் மஹாஜன சங்கமானது தேவையான பொக்கிஷத்தைத் தயாரிக்க வேண்டும். உங்கள் மத்தியிலுள்ள கல்வியில் தேர்ந்தவர்கள் கிராமங்களிலுள்ள குறுகிய நோக்கத்தையுடைய உங்கள் சகோதரரை முன்னேற்றுவதாகிய அன்பு நிறைந்த இவ் வேலையை எடுத்துக்கொள்ளவேண்டும். இச்சமயத்தில், வாலிபர் இயக்கத்தைப் பற்றி அதிகம் பேசமுடியாது. ஏனென்றால் பிரசித்தமடைந்த என்னுடைய சிநேகிதர் ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் கடந்த வருஷம் தலைமை வகித்தபோது உங்களுக்கு முன்பாக வைத்த உபந்நியாசத்தில் தேசத்தின் சுய உணர்ச்சிக்காக இளைஞரின விருத்திக்கு அவசியமானவைகள் என்ன என்பதை வற்புறுத்திக் கூறினார்.

அவர் உபந்நியாசிக்கும்போது சீன தேசத்தின் வாலிபர் இயக்கத்தை ஓர் உதாரணமாகச்சொல்லியதை நீங்கள்மறந்திருக்கமாட்டீர்களென்று நினைக்கிறேன். இக்குலத்தின் வாலிபருக்கு அவருடைய சாதுரியமும் சொல் வல்லமையுமுள்ள உபந்நியாசம் செவிடன் காதில் விழுவது போல விழவில்லை யென்பதை யறிந்து நான் பரவசமடைகிறேன். ஏனென்றால் நாம் அறிந்தபடி நாடார் குல வாலிபர்கள் தங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொண்டு பெரியோர்களுடைய மகாநாட்டிற்குச் சமீபத்திலே தாங்களும் ஒரு மகாநாடு கூடுகிறார்கள். இவர்களின் வைராக்கியமும், விடா முயற்சியும் தம்மைத்தாமே தத்தம் செய்யும் குணமும், இவர்கள் குறித்த எல்லையை நோக்கி ஓடும் பந்தய ஓட்டத்தில் முழுவதும் ஜெயத்தை யுண்டாக்குமென்று நம்புகிறேன். இன்றைக்குள்ள வாலிபர்களே நாளைக்கு ஜாதீயத் தலைவர்களாவார்களென்பதை மறவாதீர்கள். நான் முடிக்கு முன்னதாக நமது தேசமானது ராஜரீக முறையில் பெரும் மாறுதலடையக் கூடிய நிலைமையி லிருக்கிறதென்பதை நினைப் பூட்ட விரும்புகிறேன்.

1919-ம் வருஷத்திய சீர்திருத்தங்கள் நமக்குக் கொடுக்கப்பட்டு ஒன்பது வருஷங்களாகின்றன. நாம் இப்போது மேற்கொண்ட சீர்திருத்தங்களை எதிர் பார்க்கிறோம். ஒவ்வொரு ஜாதியும் இது விஷயமாய் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதைத் தாங்களே நிச்சயிக்கவேண்டும். அதை நமது தேசத்திற்குரிய கடமையாகவும் கருத வேண்டும். நாம் சென்ற ஒன்பது வருடத்தில் செய்த வேலை இப்பொழுது நிர்ணயிக்கப்படும். நமது மாகாணம் இது விஷயமாய் சரியாய் நடந்திருக்கிறதென்பதற்காக சந்தோஷப்படுகிறேன்.

நாம் எல்லாரும் சுயராஜ்யமாகிய எல்லையை நோக்கி உறுதியாகச்செல்வோமென்றும், அச் சுயராஜ்யத்தில் நாடார்கள் தங்களுடைய பதவிக்கும் கீர்த்திக்கும் தகுந்தவாறு உழைப்பார்களென்றும் முழு மனதோடு நம்புகிறேன்.

இம் மகாநாட்டைச் சந்தோஷத்துடன் திறந்துவைக்கிறேன். இம் மகாநாடு சிறப்புடன் நடைபெறும்படி எல்லாம் வல்ல இறைவனை வணங்குகின்றேன்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

(2-ம் பக்கத்தின் தொடர்பு.)

ஏராளமான பொருள்களை வருவித்து அவைகளைக் கொண்டு நம்மவர்களுடைய சௌகரியத்திற்காகவும், அந்தந்த ஊர் நாடார்களால் அந்தந்த ஊர்களில் கோவில்கள், குளங்கள், சத்திரங்கள், பேட்டைகள், நந்தவனங்கள், கல்விச்சாலைகள், தண்ணீர் பந்தல்கள், அழகிய கட்டடங்கள் முதலியவைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நம்மவர்களுக்குள் கொடுக்கல் வாங்கல் விஷயங்களில் ஏற்படும் தகராறுகளை, சமூக உறவின் முறையார் அவர்களே தீர்த்து வைத்தும் வந்தார்கள். ஷை ஏற்பாடுகளை நமது முன்னோர்கள் எந்த நன்னோக்கத்தோடு ஏற்படுத்தினார்களோ, அதற்கிணங்க தற்காலம் சில இடங்களில் நடைபெற்று வராமலிருப்பது பற்றி வருந்த வேண்டியவர்களாயிருக்கின்றோம். ஆனதால் நம் முன்னோர்கள் மகமையை எவ்வித சட்டதிட்டங்களோடு வசூலித்து, எத்தகைய புண்ணிய காரியங்களில் செலவு செய்து, நன்மை அடைந்தார்களென்பதைச் சீர்தூக்கி நாமும் விடா முயற்சி செய்து, கால தேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடி நம்முடைய முன்னோர்களைப் பின்பற்றி வேண்டிய சகல நன்மைகளைப் பெறுவதோடு, நம் சந்ததியார்கள் நம்மைப் போற்றும்படி நடந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## வியாபாரம், விவசாயம், கைத்தொழில்.

**சீமான்களே!**

நாம் முக்கியமாய் வியாபாரம், விவசாயம், கைத்தொழில் இம் மூன்று வகையாலும் பொருள் தேடலாம். நம்மில் பெரும்பான்மையோர் வியாபாரிகளாகவும் விவசாயிகளாகவுமிருக்கின்றோம். சில இடங்களில் மட்டும் நாம் இப்பொழுது நெல், அரிசி, பலசரக்கு, வெல்லம், பருத்தி, பாக்கு, காப்பி, ஏலம் முதலிய வியாபாரங்களை செய்து வருகின்றோம். இவைகளும் அநேகமாய் உள்நாட்டு வியாபாரமாகவே இருக்கின்றன. அன்னியநாட்டுக்கு ஏற்றுமதியாகும் மணிலாக்கொட்டை, பஞ்சு, தோல் முதலிய வியாபாரங்களிலாவது, அன்னிய நாட்டிலிருந்து இறக்குமதியாகும் ஜவுளி, நூல், சாயம், மருந்து, இரும்பு, பித்தளை, செம்பு முதலிய லோகங்கள், தோப்புச்சாமான்கள் முதலிய வியாபாரங்களிலாவது செல்வாக்கடைந்துவிடவில்லை. இவ்வியாபாரங்கள் செய்ய ஐரோப்பிய நாடுகளின் வியாபார முறையைக் கையாண்டு, அநேக பங்குகள் கொண்ட பெருந்தொகையான மூலதனத்துடன் கூடிய பெரிய கூட்டுக்கம்பெனிகள் ஏற்படுத்தி வியாபாரம் நடத்தவேண்டும். நம் சந்ததியார்களுக்காவது பயன்படும் வண்ணம் வியாபாரத்தில் விர்த்தியடைந்து கொண்டிருக்கிற ஜப்பான், கிரேட்பிரிட்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய தேசங்களுக்கு தீக்ஷண்ய புத்தியும் ஊக்கமுமுள்ள வாலிபர்களை அனுப்பி அங்குள்ள வியாபார முறையைக் கற்றுவரும்படி செய்யவேண்டும். அதன் மூலம் நமது வியாபாரங்கள் அபிவிர்த்தியடையும்.

விவசாயமானது உலகத்திலுள்ள சகல மனிதர்களுக்கும் நல்ல ரக்ஷிக்கும் தொழிலாக இருக்கிறது. நம்மவர்களிலும் விவசாயிகளிருக்கிறார்கள். நாம் வியாபாரத்தைப்போல விவசாயத்தை ஏன் கவனிப்பதில்லையென்றால், அதில் அதிக வருமானம் இல்லையென்பதேயாம். நாம் அப்படி நினைக்கவேண்டியதில்லை. இப்பொழுது இருக்கும் நவீன முறைப்படி விவசாயக் கல்வி கற்று நூதனமான உழவு தளவாடங்களினால் பூமியைச் சரியாகப் பண்படுத்தி ரசாயன முறைப்படி நல்ல உரங்களிட்டு, எந்தெந்த நிலங்களில் எவைகளைச் சாகுபடி செய்யவேண்டுமோ, அவைகளைச் சாகுபடி செய்து காலா காலங்களில் விவசாயம் செய்வோமானால் இப்போது இருப்பதைக் காட்டிலும் பன்மடங்கு வருமானம் கிடைக்கும். ஆனதால் நம் ஜன சமூகத்தார் விவசாயக் கல்வியும் கற்க வேண்டியதவசியமாயிருக்கிறது.

கைத்தொழிலானது, விசேஷ லாபகரமானதும் நஷ்டமில்லாததுமான தொழிலாக விருக்கிறது. இப்பொழுது நம்மவர்களுக்குள் அதிக வருமானம் தரத்தக்க எந்தக் கைத்தொழிலும் [illegible] தெரியவில்லை. ஒரு தேச [illegible] வது நல்ல நிலமை [illegible] சுபிக்ஷமுற வேண்டுமானால், கைத்தொழில் அபிவிர்த்தி செய்யப்பட்டாலன்றி வேறு வகையில் முன்னேற முடியாதென்பது நிச்சயம். மேனாட்டார் மேன்மை பெற்று விளங்குவது அவர்களிடமுள்ள கைத்தொழிலினாலேயாம். ஜப்பான், ஜெர்மனி, கிரேட்பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகளிலுள்ள பணக்குவியல்களெல்லாம், இயற்கைப் பொருள்களைச் செயற்கைப் பொருள்களாக மாற்றியதாலல்லவா வந்தன? சொற்ப மதிப்புள்ள இரும்பு, பித்தளைகளைக்கொண்டு 300—400 ரூபாய் பெறுமான சாமான்களாகவும் நிலக்கரியைப் பக்குவப்படுத்தி பல நூறு ரூபாய் பெறுமானமுள்ள வயிரங்களாக்கியும், சொற்ப விலைக்கு நம்மிடம் வாங்கும் பருத்தியை, ஆடைகளாக்கி ஒன்றுக்கு ஐம்பது பங்காக உயர்த்தி நம்மிடமே விற்றும் வருவார்களானால், ஏன் அவர்கள் உலகத்தில் செல்வத்தில் சிறந்தவர்களாக விளங்க மாட்டார்கள்? நாமும் தொழிற்கல்வி கற்று ஏன் அவர்களைப்போல் மேன்பாடு அடைதல் கூடாது? மேனாட்டில் பிரபல பத்திரிகை கம்பெனி ஒன்றில் இயந்திரங்களின் உதவியினால் காலை 7½-மணிக்கு உபயோகமற்ற மரங்களை வெட்டி அம்மரப் பட்டைகளையே காகிதமாக உற்பத்தி செய்து சமாச்சாரங்களை அச்சிட்டு இரவு 10-மணிக்கு பத்திரிகைகளாக சந்தாதார்களுக்கு அனுப்புகிறார்களாம். என்னே! கைத் தொழிலின் வன்மை. உலகமெங்கும் மிகுதியாகக் காணப்படுகிற போர்டு மோட்டார்கார் கம்பெனியின் சொந்தக்காரராகிய ஹென்றி போர்டு துரைக்கு ஷை மோட்டார் விற்பனையினால் 1-மணி நேரத்துக்கு 40 பவுன் வீதம் லாபம் கிடைக்கிறதாம்! ஷை மோட்டார் தொழிற்சாலையில் சராசரி 7 நிமிஷத்துக்கு ஒரு மோட்டார் வீதம் செய்து முடிக்கப்படுகிறதாம்! அப்பேர்ப்பட்ட கைத்தொழிலையுடைய நாட்டில் ஏன் செல்வம் குவியாது? நாமும் அவர்களைப் பின்பற்றி அவர்களைப்போல் வர்த்தகம், விவசாயம், கைத்தொழில் என்னும் காரியங்களில் கருத்தைச் செலுத்தி, செல்வத்தில் சிறந்து, மேன்மையுறும்படி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

நம்மில் இதுவரை சொற்ப கைத்தொழில்களாகிய தீக்குச்சி, சோப்பு, பிஸ்கத், வார்னிஷ், புகையிலை சம்பந்தமானவைகள் தான் இருக்கின்றன. என்றாலும் அவைகளிலும் போதிய வாறு சிறப்புற்றதாகச் சொல்ல முடியாது. வியாபாரிகளாகிய நாம் நமது கைத்தொழில் சாமான்களையே விற்பனைக்கு வாங்கிவந்தால் அதை அபிவிர்த்தி செய்வதாகுமன்றோ?

## நமது "நாடார் பாங்கு".

**அன்பு நிறைந்த எம் நாடார் குல கனவான்களே!**

நமது நாடார் மஹாஜன சங்கம் 6—வது மஹாநாட்டின் தீர்மானத்திற்கிணங்க, தூத்துக்குடியில் ஸ்தாபிக்கப்பெற்ற நமது நாடார் பாங்கு, எதிர்பார்த்தபடி மூலதனத்திற்குப் பங்குகள் விசேஷமாகச் சேராவிட்டாலும், நிர்வாகிகளுடைய வேலைத்திறமையால் லாபகரமாக நடந்து வருகிறது. விருதுநகரிலும் அதனுடைய கிளைப்பாங்கு ஒன்று சமீபத்தில் ஸ்தாபனமாகி இருக்கிறது. ரிஜிஸ்ட்டரான மூலதனமாகிய இருபது லட்ச ரூபாய்க்குப் பங்குகள் சேர்த்து, மூலதனத்தைப் பெருக்கி, நம்மவர்கள் வசிக்கும் முக்கிய நகரங்களிலும் கிளை பாங்குகள் ஸ்தாபித்தால் அநேக கைத்தொழிற்சாலைகளும் வியாபார ஸ்தலங்களும் ஏற்படுத்திக் கொள்ளலாம். அதனால் ஏழைகளுக்கு தொழில் முறை ஏற்படுவதுடன் கைத்தொழில் விருத்தி செய்யவும், வியாபார விருத்திக்கும், ரொக்க லேவா தேவிக்கு கொடுத்து உதவுதலுக்கும், ஏழை மக்களுடையவும் பொது ஸ்தாபனங்களுடையவும் பணங்களைப் பாதுகாப்பதற்கும், உபயோகமாவதுடன் தக்க லாபமும் கிடைக்கும். ஆனதால் நமது நாடார் பாங்கின் அபிவிர்த்திக்கான முயற்சி செய்து, கூடுதலான பங்குகள் ஒவ்வொருவரும் எடுத்து ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

## பத்திரிகை.

**அரசகுலத்தண்ணல்களே!**

எந்த தேசமும் ஜன சமூகமும் அபிவிர்த்தி அடைவதற்குள்ள ஹேதுக்களில் பத்திரிகையும் ஓர் முக்கிய சாதனமென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அந்நோக்கத்தோடு நம் ஜாதியப் பத்திரிகைகள் அநேகம்தோன்றினவாயினும், இப்போது செவ்வனே நடைபெற்று வருவது இவ்வூரில் நடக்கும் நமது "நாடார் குல மித்திரன்" என்ற வாரப்பத்திரிகையும், திருவிதாங்கூரிலுள்ள "நாடார் நண்பன்" என்ற மாதப்பத்திரிகையுமாகிய இரண்டு மாத்திரமே தெரிகிறது. 13 லக்ஷம் ஜனத்தொகை கொண்ட நாம் நாடார் ஜன சமூகத்திற்குப் பலதினசரி, வார, மாதப் பத்திரிகைகள் நடைபெற்று வரவேண்டிய தவசியமாகினும், இப்பொழுது நடந்துவரும் இரண்டொரு பத்திரிகைகளுக்கே போதிய சந்தாதார்கள் நம்மில் இல்லாமலிருப்பதாகத் தெரியவருகிறது. நம்மில் நூற்றுக்கு ஒருவர் வீதம் பத்திரிகையை ஆதரித்தாலும், பல ஆயிரக்கணக்கான சந்தாதார்கள் சேர்ந்துவிடுவார்கள். இப்பொழுது வாரப்பத்திரிகையாயிருப்பது தினசரிப் பத்திரிகையாகவும், இன்னும் பல வாரப்பத்திரிகைகளும், மாதப் பத்திரிகைகளும் ஏற்பட்டால், நம் ஜாதி முன்னேற்றத்திற்கான தொண்டுபுரிய மிகவும் ஏதுவாகும். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் பத்திரிகைகளுக்குப் போதிய துணை புரிந்து ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தவிர, நம்முடைய குறைகளை அரசாங்கத்தார் நன்கு அறிந்து கொள்வதற்கேதுவாக, நம்மவர்களால் ஓர் ஆங்கிலப் பத்திரிகை நடத்தப்பெறுமானால் மிகவும் நன்மை ஏற்படுமென்று நம்புகிறேன்.

## வாலிபர் மகாநாடு.

**சகோதரர்களே!**

நமது குல வாலிபர்களுள், சில வருஷங்களாக உலகின் போக்கை அனுசரித்து, ஒருவித உற்சாகமும், ஊக்கமும், உணர்ச்சியும் உண்டாகி அதன் பயனாக இவ்வருஷம் இவ்வூரில் 2-வது வாலிப நாடார் மஹாநாடு கூடவிருப்பதைப்பற்றி சந்தோஷமடைகிறேன். இது நம் குல முன்னேற்றத்திற்கு ஓர் நல்ல அறிகுறி என்றே நான் நம்புகிறேன். ஏனென்றால், சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னதாக சாதாரண நிலைமையிலிருந்த ஜப்பான் தேசமானது, அங்குள்ள வாலிபர்களின் கிளர்ச்சியினால், விவசாயம், கைத்தொழில், வியாபாரம், அரசாங்கம் முதலிய பல துறைகளிலும் தீவிரமாக முன்னேறி, தற்போது உலகத்திலுள்ள வல்லரசுகளில் ஒன்றாக விளங்குகிறது. துருக்கி, எகிப்து, அயர்லாண்டு முதலிய தேசங்களும், அங்குள்ள வாலிபர்களாலேயே விடுதலை அடைந்திருக்கின்றன. ஆகையால் எனது வாலிபர்களே! நமது குல முன்னேற்றம் உங்களுடைய கையிலிருக்கிறதென்பதை உணர்ந்து நமது தாய்ச் சங்கம் நிறைவேற்றும் ஒவ்வொரு தீர்மானத்தையும் அமுலுக்குக்கொண்டுவர அதி தீவிர முயற்சி செய்வதுடன், இன்னும் நம் குல முன்னேற்றத்திற்குரிய சகல காரியங்களிலும் தலையிட்டு வேலை செய்து உன்னத நிலைமைக்குக் கொண்டுவருவீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

## நமது நிலைமை.

**பாண்டியன் மரபினர்களே!**

நாம் அரச குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. நம்மிடம் இயற்கையிலேயே அமைந்திருக்கும் வீரம், ஒழுக்கம், ஊக்கம், தயாளம் முதலிய குணங்களிலிருந்தும், ஜாதிக் கட்டுப்பாடு, சட்டதிட்டங்கள் இன்னும் சில சம்பிரதாயங்களிலிருந்தும் நமது குல மேன்மை நன்கு விளங்கும். என்றாலும், இப்பெருமையைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பதால் பிரயோசனமில்லை. உண்மையில் முற்கால நம்முடைய மேலான அந்தஸ்தை அடைய வேண்டுமானால், நம்மிடம் காணப்படும் குறைகள் என்னவென்று ஆராய்ந்து அவைகளைப் போக்குவதற்கான மார்க்கங்களைத் தேடவேண்டும்.

நம் நாடார் மஹாஜன சங்கத்தின் பலனாய், நம்மவர்கள் வசிக்கும் பல கிராமங்களிலும், ஆரம்பப் பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. என்றாலும் இன்னும் பல ஊர்களில் ஆண், பெண் பிரதமப் பாடசாலைகளை ஏற்படுத்தி, நம்மில் படியாதவர்களே இல்லையென்றும், படித்தவர்கள் என்ற கணக்கில் முதலாவது படியிலும் இருக்கும்படி செய்துகொள்ளவேண்டும். வியாபாரக் கல்வி, விவசாயக்கல்வி, கைத்தொழில் கல்வி, சட்டக்கல்வி, ரசாயனக்கல்வி முதலியவைகள் பயின்று வியாபாரத்திலும், கைத்தொழிலிலும், விவசாயத்திலும் மேன்மை அடைந்து, செல்வம் படைத்து, உயர்தர உத்தியோகங்களிலும், அரசாங்க அங்கங்களிலும் ஏராளமான ஸ்தானங்களை அடைந்து, ஸ்தல ஸ்தாபனங்களிலும் நம்குல பிரதிநிதிகள் அதிகப்படுவார்களானால், நாம் நம்முடைய மேலான அந்தஸ்தை அடைந்தவர்களாவோம்.

## நமது நாட்டின் நிலைமை.

**அன்பர்களே!**

இது வரையும் நமது சமூக சம்மந்தமாகவே கூறிவந்தேன். என்றாலும் நாட்டின் தன்மை பற்றியே நமது வாழ்வும் இடம் பெற்றிருப்பதால், நமது நாட்டின் நிலைமை குறித்து நாம் இங்கு ஆலோசிப்பது மிகை ஆகாதென்றே நினைக்கிறேன். நமது நாடு ஒரு காலத்தில் செல்வம் பொழிந்து, சிறப்புற்றோங்கி, பெருமை பெற்று வந்ததற்குப் பலதேசத்தாரும், தங்கள் தங்கள் நாடுவிட்டு நமது நாடுபுகுந்தும், படையெடுத்தும் வந்திருப்பதொன்றே போதிய சான்றாகக் கூறுவதில் யாரும் சந்தேகிக்க இடமில்லை. அப்பேர்ப்பட்ட புனித நாடு, மூலப்பொருள்கள் பல பெறுதற்கிடமாயிருந்தும், மக்கள் வாழ்க்கைக்கான சாமான்கள் பலவற்றிற்கும் பிறநாட்டுக்கப்பல்களின் வரவை இக்காலையில் எதிர்பார்த்திருக்கிறது. மற்ற எத் தேசத்திலும் இல்லாதவாறு, இங்கு நூற்றுக்கு 3½ பேரே படித்தவர்களாக இருக்கிறார்கள். நமது நாட்டார் எதற்கும் மற்ற நாட்டினரையே பின்பற்றும் அவசிய நியமத்துடன் கூடிய தன்னம பற்றியவராய் இருக்கிறார்கள். ஆட்சி முறையும் அன்னியர் வாய்ப்பட்டிருக்கிறது. இக்காரணங்களால் நமது நாடு கீழான நிலைமையிலிருக்கிறதென்று ஏன் சொல்லக்கூடாது?

நமது நாட்டின் இந்நிலைமையை உணர்ந்த தேசாபிமான முன்னோர் பலர், உலகின் போக்கை அறிந்து திருந்துவான்வேண்டி, தேசப்பற்றுடையோராய், அதற்கான மார்க்கங்கள் தேடலாயினர். அவ்விதம் மார்க்கம்தேடவேண்டியது அவசியமாயிற்றென்றால் அது இத்தேசத்தில் பிறந்த ஒவ்வொருவருடையவும் கடமையாகுமென்பதிலும் என்ன பேதமிருக்கிறது? தேசக்கடமை உணர்ந்தோராய் தேச முன்னேற்ற தாக முற்றோராய் வெளிவந்தோர், நமது நாட்டின் முன்னேற்ற வழி காட்டுவதில் நமது சமூகத்துக்கு நாடார் மஹா ஜன சங்கம் எப்படியுளதோ, அதேபோன்று, தேசீய மஹா சபையாகிய காங்கிரஸ் மஹா சபையைக் கண்டனர். பல காலமாய் நடந்து வந்த ஷை மஹாசபையானது, மகாத்மாகாந்தி அவர்கள் தலைமை வகித்தபோது தான், மகத்தான பல வேலைகள் செய்ததென்றும், யாவர் உள்ளத்தையும் ஈர்க்கும் தன்மை பெற்றிருந்ததென்றும், பலராலும் சொல்லப்பட்டது. ஆனால் இது சமயமோ கக்ஷிகள் பெருத்து, தினமொரு திட்டமும், நிமிடமொரு பேச்சுமாக முளைத்து, நாட்டு மக்களை மனஆட்டம் கொள்ளச்செய்து வருகின்றன. முக்கியமாய் நமது தென்னாடு சம்மந்தப்பட்ட வரையில், கக்ஷிபேதத்தில் இரண்டு பெரிய பிரிவுகள் உளவெனக் கூறலாம். ஒன்று, நாடு சுயராஜ்யம் பெற்ற பின்னர்தான் (இந்துக்களுக்குள்) சமூக சீர்திருத்தம் ஏற்படவேண்டுமென்பது. மற்றொன்று, சமூக சீர்திருத்தம் ஏற்பட்டு, எவ்வித மான ஏற்றத் தாழ்வுக்கும் இடமின்றி, சமத்துவ வாழ்வு பெற்ற பின்னர் தான் அன்னியர் ஆட்சியினின்றும் விடுதலை பெற முடியுமென்பதுமேயாம். இவைகளுக்கு இடையில் நன்மார்க்கமெது—நல்லவழியெது என்றுணர்ந்து நடப்பதில் அவசியமும் நிதானமும் வேண்டுமென்பதை வற்புறுத்திக் கூறுவேன். நாட்டிலுள்ள பலகக்ஷிகளும், நாட்டின் முன்னேற்றம் கருதியே

(இதன் தொடர்பு 6-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நாடார் மஹாஜன சங்கம் 12-வது கான்பரன்ஸ்,

## அருப்புக்கோட்டை.

மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமான்

வெ. கனகசபை நாடாரவர்களின்

முதல் நாள் அக்கிராசனப் பிரசங்கம்.

சகோதர சகோதரிகளே!

இப்பெருங் கூட்டத்தில் வகித்துப் பிரசங்கம் செய்ய நீங்கள் என்னைத் தெரிந்தெடுத்ததை நான் பாராட்டுகிறேனில்லை. உங்கள் வகுப்பினர்களினின்றும் ஒருவருக்கு இச்சிறந்த பதவியை அளிக்கவேண்டுமென்ற ஓர் அவாவினு லிவ்வித முடிவு நீங்கள் செய்திருக்கலாம். ஆனால் இப்பெருமையை நம்முள், என்னிலும் வயதிலும், அநுபோகத்திலும், புகழிலும் மேம்பட்டவர்கள் அனேகர் வகிக்கத் தகுந்தவர்களிருப்பதால் அவர்களுக்கே இது உரியதென்று நான் நினைக்கிறேன். என் குறைவுகளை முற்றும் உணர்ந்த என்மேல் இச்சமயம் சுமத்தப்பட்டிருக்கும் பொறுப்பையும், என்னிடம் நீங்கள் எதிர்பார்க்கும் விஷயங்களையும் நினைத்து நான் மனம் தடுமாறுகின்றேன். நம் வகுப்பின் முன்னேற்றத்தில் எனக்குள்ள அவாவினாலும், அதற்கான தொண்டு புரிய வேண்டுமென்ற விருப்பத்தாலும்மட்டுமே நான் உங்கள் அழைப்பை மறுக்காது ஏற்றுக்கொண்டேன். எனக்கிட்ட பணியை என்னாலியன்ற அளவு செய்து முடிக்கிறேன்.

நம் வகுப்பினரேயன்றி நமது லட்சியங்களிலும், நோக்கங்களிலும் அபிமானமுள்ளவர்களும் நமது முன்னேற்றத்தைக் கோருபவர்களுமான பல கனவான்கள் நிறைந்துள்ள இக்கூட்டத்தில் நான் நமது குறைகளையும், அவைகளைச் சீர்ப்படுத்துவதற்கான மார்க்கங்களையும் மட்டும் பற்றிப் பிரசங்கம் செய்வது சரியன்று. அன்றியும் பிறிதொரு சமயம் நான் இவ்விஷயங்களைப் பற்றி மட்டும் பேசவேண்டியிருப்பதால் தற்சமயம் தேசிய வாழ்க்கையில் நம்மவர்களின் நிலைமையைப்பற்றி மட்டும் சில வார்த்தைகள் கூறுகின்றேன்.

எவ்வித நோக்கங்களையும், அல்லது கருத்துகளையும் நிலைநிறுத்தவோ அல்லது விருத்தி செய்யவோ கூடும் எக்கூட்டத்திலும் "நமது நாடெங்கும் ஒரு நவீன உணர்ச்சி தோன்றியிருக்கின்றது" என்று சொல்லப்படுவதை நாம் சாதாரணமாய் அறிவோம். இவ்வித உணர்ச்சி இந்தியா மட்டுமேயன்றி பொதுவாக உலகமெங்கும் பரவியுள்ளது. ஆயினும் அவ்வவ்விடங்களில் வெவ்வேறு விதமாக இவ்வுணர்ச்சி காணப்படுகின்றது. ஆனால் இவைகள் அனைத்தும் சுயேச்சையையும், சமத்வத்தையும் நிலை நிறுத்துவதையே கருத்தாகக் கொண்டுள்ளன. உதாரணமாக மேல்நாடுகளில் ஸ்திரீ புருஷர்களுக்குச் சமத்துவ உரிமைகளை ஸ்தாபித்தற்பொருட்டு ஓர் உணர்ச்சியும் அது சம்பந்தமான கிளர்ச்சியும் நடந்து வருகின்றன. ஆனால் இந்தியாவிலோ மற்றத் துறைகளைக்காட்டிலும் பொருளாதார ஜனசமூக விஷயங்களில் இவ்வுணர்ச்சி பலமாகத் தோன்றுகின்றது. இதன் பயனாக முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமுள்ள பல வேற்றுமைகளையும் ஜனசமூகத்தின் பற்பல வகுப்பினருக்குள் ஏற்பட்டிருக்கும் வித்தியாசங்களையும் ஒழிக்கவோ அல்லது மாறுபடுத்தவோ முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தொழிலாளர் கூட்டமென்றும், இளைஞர் கூட்டமென்றும், ஸ்திரீகள் கூட்டமென்றும், சுயமரியாதைக் கூட்டமென்றும், ஒடுக்கப்பட்டவர் கூட்டமென்றும் இன்னும் விதவிதமான நாமங்களோடு கூட்டப்படும் கூட்டங்களும், சட்டசபைகளின் மூலம் நிறைவேற்றப் பட்டிருப்பதும், நிறைவேற இருப்பதுமான பல மசோதாக்களும், பல கமிட்டி நியமனங்களும், அவர்கள் யாதாஸ்துகளும், ஜாதி, வகுப்பு, மதம் பற்றிய வித்யாசம் யாதுமின்றி எவருக்கும் சமத்வ உரிமைகளும், பொறுப்புகளும் கிடைக்கவேண்டியதற்கான முயற்சிகளையே குறிக்கின்றன. இவ்வித உணர்ச்சி எவ்வளவு தூரம் நம் வகுப்பைப்பற்றியுள்ளது என்பதை நம் கூட்டத்தின் நடவடிக்கைகள் தெரிவிக்க ஏதுவாயிருக்கலாம்.

இச்சங்கத்தை ஸ்தாபனம் செய்தவர்கள் நாம் சகல பாத்யதைகளையும் சுதந்திரங்களையும் உரிமை கொண்டாடுவதற்குத் தக்கவாறு யோக்யதை எத்துறைகளிலும் நமக்கு உண்டாகவேண்டுமென்ற சிறந்த நோக்கத்தோடும், நம் வகுப்பினருள் ஒற்றுமையும் ஐக்கிய பாவமும் நிலைபெற வேண்டுமென்றும் இதை ஏற்பாடு செய்தனர். வருடந்தோறும் கூடும் நமது கூட்டத்திலும் நாம் எவ்வளவு தூரம் இந்த யோக்கியதைகளைப் பெற்றிருக்கிறோம் என்பதை ஆராய்வதன்றி அவைகளின் மூலம் நமக்குரியவையாயிருந்தும் தாழ்ந்த வகுப்பினரென்று கருதப்படுவதால் நமக்கு அளிக்கப்படாது மறுக்கப்பட்டுவரும் நமது உரிமைகளையும் நாம் பெற முயற்சிக்கிறோம். இந்நோக்கம் நிறைவேறும் பொருட்டு நாம் நமக்குள் இருக்கும் பல வித்தியாசங்களையும், ஒருவருக்கொருவர் இருந்துவரும் மனவேறுபாடுகளையும் பொருட்படுத்தாது மறந்து எவ்வளவு தூரம் நாம் ஏகமனதாய் நமது வகுப்பின் நலத்திற்காகப் பாடுபடத் தயாராயிருக்கிறோம் என்பதைக் காட்டிவருகிறோம். பிற வகுப்பினர்களையும் நமக்கு அவர்கள் அபிமானத்தால் புரியக்கூடிய உதவி புரியும்படியும் நம் முயற்சிகளில் ஈடுபடும்படியும் வேண்டிவருகிறோம். ஆனால் நமது முயற்சிகளெல்லாம் பயனிலவாயிருக்கின்றனவென்றும் பிறாபிமானத்தினால் மட்டும் நமக்கு அதிக நன்மைகள் கிடைக்க ஏதுவில்லையென்றும் நாம் கூறுவது சரியன்றோ? என்று நான் உங்களைக் கேட்கிறேன். பல துறைகளிலும் நாம் சிறப்புப் பெற்றிருந்தும் நமது யோக்கியதைகளுக்குத் தகுந்த கௌரவம் நமக்களிக்கப்படவில்லை. பகிரங்கமாய் அவர்கள் கூறிவரும் கொள்கைகள் யாவையாயிருப்பினும் சரி, பொதுக்கூட்டங்களாலும், பத்திரிகைகளாலும் அவர்கள் கூறும் செய்திகள் எவையாயிருப்பினும் சரி, ஒவ்வொரு வகுப்பினரும் தங்கள் பரம்பரை உரிமைகளையும் சுதந்திரங்களையும் விட்டுக்கொடுக்காது வெகு ஜாக்கிரதையாயும் ஊக்கமாயும் காத்துவருகின்றனர். இவைகளுக்கு ஆதாரமாய்ப் புராதன பழக்க வழக்கங்களையும், தொன்று தொட்டு நடந்துவரும் முறைகளையும் எடுத்துக்காட்டுகின்றனர். இவ்வார்த்தைகளுக்குச் சான்றாக ஒரு உதாரணம் ஞாபகமூட்டுகிறேன். தஞ்சாவூர் வட்டம் ஆலயக் கமிட்டியார் சில மாதங்களுக்கு முன் நம் வகுப்பினர்களில் ஒருவர் அக்கமிட்டிக்கு நியமிக்கப்படுவது கூடாதென்று மும்முரமாய் எதிர்த்தனர். என் முன்னோரில் ஒரு பெரியார் கும்பகோண ஆலயக்கமிட்டி அங்கத்தினராய் அரும் பெருங் காரியங்களை இயற்றியிருக்கிறார் என்பதை யாவருக்கும் தெரிவிக்கிறேன். என் காரியங்களைச் சாதிக்கவேண்டுமென்ற சுயநலங் கருதியோ அல்லது நம்மைப்போன்ற சிறுபான்மை வகுப்பினருக்கு இன்றியமையாததான சில உத்யோகங்களும் நியமனங்களும் நம்மவர்களுக்குக் கிடைக்கவேண்டு மென்றுவது நான் விஷயங்களை இங்கு எடுத்துரைக்கவில்லை. ஆனால் இவைகளைக்கொண்டு எப்படி நம்முடைய உரிமைகள் ஜாதித் தாழ்மை என்ற ஓர் வேறு பாட்டினால் நமக்கு மறுக்கப்படுகின்றன என்பதை மட்டும் விளக்கவேண்டுவதே என் நோக்கம். இந்தச் சந்தர்ப்பத்தில் முன் ஒரு கூட்டத்தில் தலைமை வகித்த ஒரு கௌரவ அக்கிராசனர் பேசியுள்ள மொழிகள் நினைவுக்கு வருகின்றன. அவர் கூறியுள்ளதாவது:—"ஒவ்வொரு ஜாதியாரும் தாம் முன்னேற்றமடைந்ததும் தம்மை மேல் வகுப்பினராகக் கருத ஆரம்பிக்கின்றனர்." இந்தச் சமயத்தில் நமது சென்னைக் கவர்ன்மெண்டின் முதன் மந்திரியும், பல நியமனங்களைச் செய்யும் அதிகாரம் வகிப்பவரும், ஒடுக்கப்பட்டவர்களுக்கு உள்ளன்புடையவருமான கனம். டாக்டர். சுப்பராயன் அவர்கள் இவ்விடம் விஜயமாகி நமது கூட்டத்தின் சிறப்பையும், பெருமையையும் தாமே பார்த்தறிய ஏற்பட்டது நமது நல்லதிஷ்டமே. இனியின்றும் சமத்வ உரிமைகளை நாம் வகிப்பதற்கான யோக்தாம்சங்கள் உடையவர்களா, அல்லவா என்பதை அவரே தீர்மானித்தறிந்து நமக்கு இடையூறு செய்வதற்கென்றே வீணைக் குறுக்கிடுபவர்கள் கூற்றைச் செவியிலேற்காது புறக்கணித்தல் கூடுமன்றோ? இங்கு கூடியிருக்கும் இக்கூட்டத்தினின்றும், ஸ்தானத்தின் அகமும் மேற் பிறப்பென்ற வேறுபாடும் தேசத்தின் முன்னேற்றத்திற்கு இடையூறுகள் ஆகும் என்பதை தேச நலத்தையே மற்றெவற்றிலும் மேன்மையாகக் கருதுபவருக்கு நாம் கூற விரும்பும் சிறந்த செய்தியாகும். நம்முடைய பிறவகுப்புச் சகோதரர்கள் தங்கள் மனோபாவத்தை மாற்றுவதற்கான காலம் வந்துவிட்டது என்பதை அறிவார்களாக! நம் தேசத்தில் சட்ட திட்டங்களைக் கொண்டே தான் சமுதாய விஷயங்களிற்கூட சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியதாயிருக்கிறது. இதற்குக் காரணம் பொதுமக்கள் தம் மனதில் இவ்விஷயங்களை ஆராய்ச்சி செய்து தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை ஏற்படுத்திக் கொள்ளாததேயாகும். நமக்குள்ளிருக்கும் பல ஜனசமூக வித்தியாசங்களும் வேற்றுமைகளும் களைந்தெறியப்பட்டாலன்றி நமது தேசத்தின் முன்னேற்றத்தில் நாம் அவாவுறுவது நியாயமன்று. இதற்கிடையில் எவ்வித நன் முயற்சிகள் செய்யப்படினும் அவைகள் வீண் முயற்சிகளே ஆகும். சரித்திரங்களில் நான் கூறுவதற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன. ஜப்பான் தேசத்தின் சரித்திரத்தை நாம் படிப்போமாயின் நான் கூறுவது அனைத்தும் நியாயமென்று தெரியவரும். அந்தத் தேசத்தில் சமுதாயச் சீர்திருத்தங்கள் ஏற்பட்ட பிறகே அந்நாடு முன்னேற்றமடைந்தது.

ஜாதி, வகுப்பு என்ற வித்தியாசங்களைக்கொண்டு ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை அலக்ஷியமாக நடத்தி வருவது இந்து மதத்திற்கே ஒரு அவமதிப்பாகும். பொருளற்ற இவ்வேற்றுமைகள் இருந்துவருமாயின் நமது தேசத்தில் ஒற்றுமையும், ஐக்கியமும் ஏற்படுவது அசாத்யம். ஒரு சிறுபான்மையோர் தாங்கள் ஏதோ மேற்குலத்துதித்தவர் என்பதை ஆதாரமாகக்கொண்டு எல்லா உரிமைகளையும் கவர்ந்து லக்ஷக்கணக்கான மற்றையோரைத் தாழ்மையாக நடத்தி, அவர்களை விரோதங் கொள்வது முறையா? இது நியாயமா? தேசத்தின் நலத்திற்கு இது சாதகமாகுமா? தன்னுள் ஒற்றுமையற்ற ஒரு குடும்பம் நிலை நிற்காது. தாழ்ந்த வகுப்பினர்களும் அவயவங்களிலும், ரூபத்திலும் நம்மை ஒத்தவர்களே. சட்டத்திற்கு முன்பு நாம் சமத்துவம் கேட்கிறோம். இந்தியர்களுக்கு நெட்டாலிலும், கேப் காலனியிலும் நடக்கும் கொடுமையை நாம் வெகுவாகக் கண்டிக்கிறோம். ஆனால் நாமோ இவைகளிலும் மேம்பட்ட குற்றம் செய்கிறோம் என்பதை மறக்கவோ, அல்லது அசட்டையோ செய்கிறோம். நமது தேசத்தில் சிறந்த புதல்வர்களில் ஒருவரும் பெரிய ரஸாயன சாஸ்திரியுமான ஸர். பி. ஸி. ரே என்பவரால் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு கூறப்பட்டவை எனினும் தற்காலத்திற்கு எவ்வளவு பொருத்தமுடையனவாயிருக்கின்றன? இந்தியர்களுக்குச் சமத்வம் அளிக்கப்படவில்லையென்றும் முழுவதும் ஆங்கிலேயர் நிறைந்த ஒரு கமிஷன் இந்தியாவிற்கு அனுப்பப்படுவது இந்தியாவை அவமதித்ததாகுமென்றும் ஆகையால் அதைப் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்றும் தீர்மானம் செய்யும் நம் தேயத்தாரிற் சிலர் நம் சகோதரர்களுக்கே சமத்வம் இல்லையென்று மறுப்பது என்ன விந்தை? ஜாதி வகுப்பு வித்தியாசங்களைக்கொண்டு ஏற்றத் தாழ்வு கொண்டாடுபவர் நான் மேற்கோளாகக் காட்டியுள்ள வார்த்தைகளைக் கவனிப்பார்களாக. சட்ட வரம்புக்குட்பட்

(இதன் தொடர்பு ஈ பக்கம்பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# சங்கம் பிரஸிடெண்ட்

## திருவாளர், வெ. கனகசபை நாடார் அவர்களின்

## 2-ம் நாள் பிரசங்கம்.

சகோதரர்களே!

இம்முறையும் நமது மஹாஜன சங்கத்தின் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பிரசங்கம் செய்யும்படி என்னை நீங்கள் அழைத்த உங்கள் அன்பை நான் பாராட்டுகிறேன். இப்பெருமையை நான் பெறும்படி நீங்கள் செய்வித்ததற்காக என் மனமார்ந்த நன்றியறிதலை உங்களுக்குச் செலுத்துகிறேன். விருதுநகர் நாடார் பரிபாலன சபையார் அன்பான அழைப்பினால் பல தினங்கள் நம் சகோதரர்களோடு நெருங்கிப் பழக நேர்ந்த பாக்கியமும், நம் சங்கத்தின் கௌன்ஸில் கூட்டங்களின் நடவடிக்கைகளை ஆய்ந்து தெரிந்துகொண்டிருப்பதும் தவிர வேறெந்த முறையிலும் என் யோக்யதைகள் சென்ற வருஷத்திலும் மேம்பட்டிருக்கின்றனவென்று நான் கூற முடியாது. என் சொந்த அலுவல்களின் மிகுதியால் நமது கௌன்ஸில் கூட்டங்களுக்குக்கூட நான் வந்திருப்பது இயலாததாகின்றதென்பதைக் குறித்து நான் வருந்துகிறேன்.

சென்ற வருஷம் அக்கிராசனப் பிரசங்கத்தில் நான் குறிப்பிட்டிருந்த பல விஷயங்கள் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரப்படவில்லை என்பதைக் குறித்து எனக்குச் சிறிது கிலேசமேற்படுகின்றதாயினும் இதற்குக் காரணம் சௌகரியக் குறைவுகளே என்று நானே தேறுதலடைகிறேன்.

நம் கான்பரன்ஸோடு சேர்ந்தாற்போலவே நம்மவர்களால் செய்யப்பட்ட சாமான்களைச்சேகரித்து ஒரு "பொருட் காட்சி"யும் அமைக்க நீங்கள் உத்தேசித்திருந்ததாக நான் கேள்விப்பட்டு மிகவும் ஆவலோடு அதை எதிர்பார்த்திருந்தேன். மறைந்து கிடக்கும் நமது திறமைகளனைத்தையும் வெளிக்காட்டக்கூடிய இந்த ஏற்பாடு நடைபெறாதுபோனதைப் பற்றி உங்களெல்லாரிலும் நான் வருந்துகிறேன். எக்காரணங்களால் இது நின்றுபோயிற்றென்பதை இக்கூட்டத்தை ஏற்பாடு செய்து நடத்தும் நமது சகோதரர்கள் நன்கறிவார்கள் என்று நம்புகிறேன். அக்காரணங்கள் எவையாயிருப்பினும் சரி அவைகளை நாம் விசாரிப்பதிற் பயனில்லை. நம்முடைய முன்னேற்றத்திற்கு ஏதுவாகுமெனத் தோன்றுகின்ற சில விஷயங்களை நீங்கள் அநுஷ்டிப்பீர்களென்ற நம்பிக்கையுடன் இம்முறையும் எடுத்துரைக்கிறேன். நமது மஹாஜன சங்கம் வலிமையடைவதற்கு முக்கிய ஆதாரமாயுள்ளது பிரசார வேலை. பிரசார வேலையோ நாம் எவ்வளவு பண உதவி செய்கின்றோமோ அதைப் பொறுத்ததாயிருக்கின்றது. நேற்றைய தினம் நான் கூறியபடி இதை நீங்கள் நிறுத்தியிருப்பதை அறிந்து நான் மிகவும் கவலையுறுகின்றேன். ஏனெனில் இப்பிற்போக்கான செய்கையினால் நமது சங்கத்தின் பெருமையையும், மேன்மையையுமேயன்றி அதன் பிரபலமும் நாளடைவில் குறைந்துவிடும். நம் வகுப்பினருக்கு உண்மையாகவே நமது சங்கத்தின் மூலம் நலம் கிடைக்க வேண்டுமென்பது உங்கள் நோக்கமாயிருப்பின், நமது நோக்கங்கள் எங்கும் விளம்பரமாகும்படி செய்ய வேண்டும். சென்ற வருஷம் நமது பிரசாரகர்களை ஊரூராய் அனுப்புவதோடு கூட நமது பத்திரிகைகளை நல்ல நிலைமையில் வைக்கவேண்டுமென்று நான் அபிப்பிராயப்பட்டேன். இச்சங்கத்தை ஸ்தாபித்தவர்களின் நோக்கங்கள் பூர்த்தியடைய வேண்டுமென்பது நமது விருப்பமானால் பிரசார வேலையை திரும்பவும் நாம் வெகு தீவிரமாக ஆரம்பிக்கவேண்டும். போதுமான பொருள் சகாயம் நமக்கு ஏற்படாததினால் இவ்வாறு முடிவு செய்ய நேர்ந்தது என்பதை நான் அறிகிறேன். நமது சங்கத்தின் பரிபாலன செலவுகள் சிக்கனமாக நடைபெற வேண்டுமென்பதில் எனக்கும் அதிக ஆவல் தான். ஆயினும் சிக்கனத்தின் பொருட்டு நமது சங்கத்திற்கே மூலாதாரமான இந்த வேலையை நாம் நிறுத்துவது சரியல்லவென்று எனக்குத் தோன்றுகிறது. இதைக் காட்டிலும் பொருள் வசூலை ஒழுங்குபடுத்தி அதைசரியாக நிர்வகிப்பதற்கான முறைகளைத் தேடுவதுமன்றி புதிதாகப் பொருள் சம்பாதிப்பதற்கான வழிகளையும் நாம் தேடுவது நலமாகும். இந்த சந்தர்ப்பத்தில் நமது பொருளாதாரத்தைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

### பொருளாதார நிலை.

நம்மால் வசூல் செய்யப்படும் பொருள் சொற்பமாயிருப்பது ஒரு பெரிய குறையாகாது. ஆனால் வசூலிக்கப்படும் பொருளை நன்கு நிர்வகிக்கத் தவறுதலும் சரியாக விநியோகிக்காமலிருப்பதுமே பெரிய குறைகளாகும். இக்குறைகளினால்தான் நமது வருவாய் சொற்பமாய்விட்டது என்று நமக்குத் தோன்றுகிறது. நான் கேள்விப்பட்டது உண்மையாயிருக்குமானால் சில இடங்களில் பொருள் வசூலிக்கு முறைகள் சீராயில்லாததாலும் வசூலித்த பொருள் முழுதும் சரியாய் நிர்வகிக்கப்படாததாலும் வரவர வசூல் குறைந்துகொண்டே வருகிறதாம். சில இடங்களில் தொன்றுதொட்டு வழக்கமாய்க் கொடுபட்டுவரும் பொருள்கள் குறைவுபடுவதற்கான காரணங்களை நாம் நன்கு ஆராய்ந்தறிந்து எங்கு நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டிருக்கிறதோ அங்கு மறுபடியும் நமது ஜனங்களுக்கு நம்பிக்கையேற்படுவதற்கான பிரசாரத்தை நாம் உடனே ஆரம்பிக்கவேண்டும். பிரசாரமும், பொருளுதவியும் ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ளவையாதலின் அவைகள் இரண்டையும் விருத்தி செய்ய நாம் இன்று முதலே முயற்சி செய்வோமாக. நமது வகுப்பிற்கான தொண்டும் சேவையும் புரியத் தயாராயிருக்கும் நமது வாலிபர்கள் இவ்வேலைகளைக் கவனிக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன். நமது ஸ்தல கமிட்டியார்களும் இவ்வித வேலையைக் கைக்கொண்டு யாவற்றையும் சீர்படுத்திக்கொள்ளக் கோருகிறேன். நமது சங்கத்தில் நம் வகுப்பினர் யாவரும் அங்கத்தினராக வேண்டுமென்ற எண்ணத்துடன் அங்கத்தினராகச் சேருவோருக்கு மிகக் குறைந்த கட்டணமே விதித்திருக்கிறோம். அவ்வாறிருந்தும் நமது ஜனத்தொகையில் வெகு சிறுபான்மையோரே அங்கத்தினராயிருப்பது ஏதனாலென்பது தெரியவில்லை. வருஷத்திற்கு ஒரு ரூபாய் நம் வகுப்பு முன்னேற்றத்திற்கென்று நாம் கொடுப்பது ஒரு பெரிய காரியமாகாது. நமது சங்கத்தின் அங்கத்தினர்களின் தொகை எவ்வளவுக்கெவ்வளவு அதிகப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு நம் சமூகத்தின் மதிப்பும், அதிகப்படுகின்றது. தொகை குறையக் குறைய மேன்மையும் குறைவுபடுகின்றது. இவ்வருஷ இறுதிக்குள் நமது சங்கத்தின் அங்கத்தினர்கள் அதிகமாவதற்கான பல முயற்சிகளையும் நீங்கள் செய்ய முற்படுவீர்களென்று நம்புகிறேன். மெய்யாகவே மன உறுதியுடனும், பொறுமையுடனும் நாம் உழைப்போமாயின் நமது எண்ணத்தை நாம் சாதிப்போம் என்பதற்கையமில்லை. தம் வகுப்பின் நலத்திற்குப் பாடுபட விரும்பும் வாலிபர்களுக்கு இதுவே ஒரு நல்ல தருணம்.

### ஜில்லா, தாலுகா கூட்டங்கள்.

நமது வகுப்பின் கூட்டங்களை நாம் காலா காலங்களில் வெவ்வேறு இடங்களில் கூட்டுவதால் ஏற்படும் நன்மைகளைப்பற்றி நீங்கள் யோசியுங்கள். இவைகள் மிகவும் அவசியமாகத் தோன்றுகின்றன. இவ்வேற்பாட்டினால் நமது வருஷ கூட்டத்தின் அலுவல்கள் மிகவும் குறைவுபடுவதன்றி இன்னும் பல சௌகரியங்களுமுள்ளன. ஆங்காங்கு அவ்வப்போது நம்மவர்களுக்குள் ஏற்படும் பிணக்குகளையும், வேறுபாடுகளையும் ஒழிக்க இவை ஏதுவாயிருப்பதன்றி, பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை அவ்வப்போது அறிவதற்கும் நாட்டில் ஏற்படும் சந்தர்ப்ப மாறுபாட்டிற்கேற்றபடி நமது திட்டங்களைமாற்றிக்கொள்ளவும் இவைகள் மிகுந்த உதவியாயிருக்கின்றன. இதன்றி வருஷாந்திரக் கூட்டம் முடிந்தும் ஒருவித ஓய்வு ஏற்படுவது இயல்பு. அதைத் தடுக்கவும் இக்கூட்டங்கள் உபயோகமாகின்றன. சில இடங்களில் இவ்விதக் கூட்டங்கள் நடைபெற ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்பதை நான் அறிவேன். இதற்குவேண்டிய பொருளை மட்டும் சேகரிப்பது சற்று சிரமமான வேலை. பிரசார நிதிகள் ஏற்படுத்துவதன்றி ஆங்காங்கு நன்கொடை வசூலித்து இக்கூட்டங்களை நடத்தினால் நலமாயிருக்கும்.

### சமுதாய வாழ்க்கையில் நம் நிலை.

ஹிந்துமத சமுதாய வாழ்வில் நமது நிலை அவ்வளவு திருப்திகரமாயில்லையென்பதை நான் கூற வேண்டுவதில்லை. நம்முடைய குறைகளை எடுத்துக்கூறி நம்மை அவமதிக்கும் பிற வகுப்பினரை நாம் கண்டிப்பது முற்றிலும் ஞாயமேயாகும். இக்குறைகள் எவை என்பதைப்பற்றியும் அவைகளைக் கடிந்தும் நேற்றுப் பிரசங்கத்தில் பேசப்பட்டது. கூடிய சீக்கிரம் இக்குறைகளைத் தாமாகவே ஜனங்கள் நீக்கி சீர்படுத்திக்கொள்ளாவிடில் ஹிந்துமத தர்ம ஸ்தாபன சட்டம், பாலிய விவாக மசோதா போன்ற சட்டங்களை அரசாங்கத்தாரே நிருபிக்கவேண்டி ஏற்படும். யாவரும் உரிமை கொண்டாடத்தக்க தேவாலயங்களிலும் நமக்குச் சமத்வம் இல்லையன்றோ? இது போன்ற இன்னும் பல குறைகளால் நாம் சிரமப்படுகிறோம். இவைகளனைத்தையும் களைந்தெறிய வேண்டுமென்று நீங்கள் மனதிற்கொண்டுள்ளதுபோலவே நானுங் கொண்டிருக்கிறேன். ஆனால் நம் நோக்கத்தை நிறைவேற்றுவதில் நிதானம் வேண்டுமென்பது மட்டுமே என் எண்ணம். நமக்குள்ளேயே இருந்துவரும் பல குறைபாடுகளும் நீங்கவேண்டுமென்பது நமது கவலையாயின், படிப்பு விருத்தியும், சமுதாய சீர்திருத்த சங்கங்களும் உண்டாகவேண்டும். தவிர சமுதாய விஷயங்களைப்பற்றிப் பிரசங்கிகளை வரவழைத்துப் பிரசங்கங்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.

### கல்வி.

நமது சங்கம் ஸ்தாபனமானது முதல் நம் வகுப்பினரின் கல்வியபிவிருத்திக்கான பல வசதிகள் ஏற்பாடு செய்வதிலேயே நம்முடைய கவனத்தை இடைவிடாது செலுத்திவந்திருக்கிறோம். எவ்வித முன்னேற்றத்திற்கும் கல்வியபிவிருத்தியே அடிப்படையாயுள்ளது என்பதைக் கைக்கொண்ட நாம் அதற்கான பல பிரயத்தனங்கள் செய்திருக்கிறோம். அனேக ஆரம்பப் பாடசாலைகளையும் உயர்தரப் பாடசாலைகளையும் நாம் ஏற்படுத்தியிருப்பதன்றி அனேக பாடசாலைகளுக்கும் பொருளுதவி செய்து வருகிறோம். இனி நம் வாலிபர்களின் மேற்படிப்பிற்கான ஒரு கல்லூரியும் ஸ்தாபிக்க நாம் தீவிரமான முயற்சிகள் எடுத்து வருகிறோம். நமது ஏழை மாணவர்களின் உதவிக்காக சிறிது காலத்திற்கு முன்பு ஒரு லாட்டரி நடைபெற்றதும், அதன் சம்பந்தமாக நமது சகோதரர்கள் எடுத்துக்கொண்ட ஊக்கமும் நம்மனைவரும் போற்றத்தக்கதாயிருந்தது. ஆனால் இங்கு ஒரு விஷயங்கூற விரும்புகிறேன். நமது நாட்டின் முன்னேற்றத்திற்குப் பொது மக்களின் கல்வியபிவிருத்தி எவ்வளவு பிரதானமோ அவ்வளவு உயர்தரப் படிப்புப் பிரதானமன்று. ஒரு சிறந்தவர் கூறியுள்ளபடி தற்கால உயர்தரப் படிப்பு நம் வாலிபர்களை தங்கள் சுதேச பழக்க வழக்கங்களை மறந்துவிடும்படி செய்கிறது. பொது ஜனங்களின் கல்வியே மிகவும் பிரதானம். சுய ஆட்சி முறைகள் முன்னேறிவரும் இக்காலத்தில் படியாதவர்கள் நம்மில் அனேகர் இருப்பது நமது க்ஷேமத்திற்கு ஒரு பலத்த இடையூறாகும்.

நமது பெண்களுக்குரிய கடமைகளைப்பற்றி ஒரு சிறிது உங்களுக்கு ஞாபகமூட்டுகின்றேன். நமது பெண்களுக்கு நாம் கல்வி புகட்ட வேண்டுவது ஒரு முக்கிய கடமை. ஏனெனில் இப்பொழுது பெண்களாய் இருப்பவர்கள் நாளடைவில் நம் நாட்டின் சிறந்த மாதர்களாக வளரவேண்டுபவர்கள். நமது தேசிய வாழ்க்கையில் பொறுப்புகளையும் சுதந்திரங்களையும் உரிமை கொண்டாட அவர்கள் ஏற்கனவே முன்வந்துள்ளனர். சமுதாய விஷயங்களிலும் மத விஷயங்களிலும் இப்பொழுது அவர்கள் கவனம் செலுத்தியுள்ளனர். ஆயினும் கூடிய சீக்கிரத்தில் நமது நாட்டின் எத்தகைய முன்னேற்றத்திற்கும் அவர்களே காரணமாயிருப்பார்களென்பதற்கு

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

ஐயமில்லை. நம் வகுப்பு ஸ்திரீகள் அக்காலத்தில் தக்க யோக்கியதை பெறும்படியாக நாமே அவர்களைச் செய்யவேண்டும். கற்றறிந்த ஸ்திரீகளாலேயே நாடு மேன்மை பெறும் என்பது உண்மை. நம்மோடு நமது ஸ்திரீகளும் முன்னேற்றத்திற்குப் பாடுபடவேண்டுமென்பதும், நமது பழைய பழக்க வழக்கங்கள் மாறுபாடடைய வேண்டுமென்பதும் நமது நோக்கமாய் இருக்குமானால் நமது பெண்களின் கல்வி அபிவிருத்திக்கான முறைகளை உடனே தேடவேண்டும்.

### ராஜீயவிஷயங்கள்.

சென்ற வருஷம் நடந்த நமது கூட்டத்திற்குப் பிறகு ராஜீயத் துறையில் ஏற்பட்டிருக்கும் ஒரு விசேஷ சம்பவம் உண்டு. அதுவே நமது அரசாங்க முறையைச் சீர்திருத்தம் செய்யவேண்டிய நோக்கத்துடன் இங்கிலாந்திலிருந்து நம் நாட்டைச் சுற்றிப் பார்வையிட்டுப் போயிருக்கும் ஸைமன் கமிஷனின் வருகை. மறுமுறை நாம் கூடுமுன் இக்கமிஷன் திரும்பி வந்து தங்கள் வேலையை முடித்து ஊருக்குத் திரும்பி விடுவார்கள். இவர்கள் வருகையை நாம் எவ்வாறு எற்பது என்பதைப்பற்றி கொடிய விவாதம் ஏற்பட்டிருப்பது நமக்குத் தெரியும். நாமோ நம் குறைகளைத் தெரிவிக்குமாறு யாதாஸ்து தயார்செய்ய ஒரு கமிட்டி நியமனம் செய்திருக்கிறோம். இப்போது நான் ஏதாகிலும் கூறினால் அது அக்கமிட்டியின் வேலையில் குறுக்கிடுவதாயிருக்கும். ஆயினும் சிறுபான்மையோரும், தற்காலத்தில் இருந்துவரும் சமுதாய வேறுபாடுகளினால் தெரிந்தெடுப்பு மூலம் பிரதிநிதித்துவம் பெறக்கூடாதவர்களுமான நமது உரிமைகள் நியமன மூலமாகவோ மற்றெவ்விதத்திலோ காப்பாற்றப்படல் வேண்டுமென்பதைமட்டும் வற்புறுத்த வேண்டும். இனி தேசியக்கட்சியார் கொள்கைகளில் நாம் எவ்வளவு தூரம் ஈடுபட்டிருக்கிறோமென்பதையும் இச்சந்தர்ப்பத்தில் தெரியப்படுத்திக்கொள்ளலாம். "பகிஷ்காரம், சட்ட மறுப்பு, வரிகொடாமை" முதலிய திட்டங்களில் நாம் அவர்களினின்றும் வேறுபடுகிறோமாயினும் நாட்டின் முன்னேற்றத்திற்கான மற்றைய திட்டங்களான தீண்டாமை, மதுவிலக்கு, கதர் பரவச்செய்தல் முதலியவைகளில் உள்ளன்போடு ஈடுபடுகிறோம். ஆகவே அவர்கள் நம்மைக் குறைகூற இடமொன்றுமிராது. இனி சமீபத்தில் கொண்டுவரப்போகும் ஸ்தல ஸ்தாபன ஆட்சி மசோதா விஷயமாய் உங்கள் அபிப்பிராயங்களை இப்பொழுது தீர்மானித்து அதிகாரிகளுக்கு அனுப்பும்படி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

என்பிரசங்கத்தை நான் முடிக்குமுன் சென்ற வருஷம் நம் வாலிபர்களுக்கு நான் கூறிய சில செய்திகளை நான் நினைப்பூட்டுகிறேன். நமது வகுப்பின் முன்னேற்றமும் நாட்டின் முன்னேற்றமும் அவர்களைப் பொறுத்ததாகவேயிருக்கின்றன அவர்கள் தங்கள் பொறுப்புகளை முற்றிலும் உணர்ந்து எவ்வித வேறுபாட்டையும் பாராட்டாது தங்கள் வேலையைச்செய்ய முன்வருவாராயின் நமது முன்னேற்றத்தைப்பற்றிய கவலையை நாம் கொள்ள வேண்டுவதில்லை அவர்களுக்கே வேண்டிய மனோதேக வலிமையும், ஊக்கமும் உண்டு. அவர்களா

## நாடார் 12-வது மகாநாட்டுத் திறப்பாளர்

# கனம் டாக்டர் P. சுப்பராயன், M. A., B. C. L., L. L. D. அவர்களின் உபந்நியாசம்.

அக்கிராசனுபதியவர்களே!
வரவேற்புச்சபை அங்கத்தினர்களே!
சீமான்களே! சீமாட்டிகளே!

நாடார் மகாஜன சங்கம் 12-வது மகாநாட்டைத் திறந்துவைக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டதற்கு மனமுவந்து வந்தனமளிக்கிறேன். இந்த மாபெரும் சிறப்பு வைபவத்தை நடத்தி வைப்பதற்கு உங்கள் முக்கிய தேவைகளையும் குறைகளையும் தெரிந்த, என்னைக் காட்டிலும் மேலான உத்தியோகஸ்தர் ஒருவரையாவது அல்லது உங்கள் ஜில்லாவில் தகுதி வாய்ந்த ஒருவரையாவது அல்லது உங்கள் ஜன சமூகத்தில் ஒருவரையாவது தேர்ந்தெடுக்கக்கூடாதாவென நினைக்கிறேன். என்னுடைய உத்தியோகத் தோரணையாவது அல்லது எனது திறமையாவது என்னைத் தேர்ந்தெடுக்கும்படி உங்களைத் தூண்டியிருக்காதென நிச்சயமாய்ச் சொல்வேன். ஆனால் ஒருக்கால் என்னுடைய சிறிய தேசீய சேவையும் தற்கால அத்தியாவசியமான தேவையைக் குறித்து நான் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயங்களும் இம்மாபெரும் மகாநாட்டைத் திறந்துவைத்து உங்களுடைய ஜன சமூகத்தின் பெரிய கூட்டத்தையும் அதன் தலைவர்களையும் சந்தித்து உங்களுடைய குறைகளை நேரில் அறிந்து போவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்படி உங்களைத் தூண்டியிருக்கலாம். இந்தப் பாகங்களில் உங்களுடைய வாழ்க்கை நிலைகளை அறிந்து கொள்வதற்கும் உங்கள் வாழ்க்கையின் கஷ்டங்களைச் சிறிதளவேனும் நிவர்த்தி செய்வதற்கும் கொடுத்த இச்சந்தர்ப்பத்தை நான் அதிகப் பெருமையாகக் கருதுகிறேன். உங்களில் அனேகரின் ஒத்துழைப்பும் ஐக்கியமும் எனக்கு இருக்கிறதென்ற தைரியத்தைக் கொண்டு எனது கடமையை யுணர்ந்து இந்த மகாநாட்டை நடத்துபவர்களின் அழைப்புக் கிணங்கி இன்று உங்கள் மத்தியில் இருக்கின்றேன்.

முறைப்படி இந்த மகாநாட்டைத் திறந்து வைக்குமுன் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

### ஜாதீய மகாநாடுகள்.

இந்த மகாநாடுகளின் வேலை என்ன? அனேக தடவைகளில் இத்தகைய ஜாதீய மகாநாடுகள் பல ஜாதிகளுக்குள் வேற்றுமையைக் கிளப்பி விடுகின்றனவென்றும், தேசியத்திற்கு எதிராக இருப்பவைகள் என்றும் கண்டிக்கப் பட்டிருக்கின்றன. இக்கண்டனங்கள் சரியா? நமது தேசத்திலுள்ள எல்லா ஜாதிகளும் இந்தியர் என்ற ஒரே ஜன சமூகம் போல் ஒன்றுகூடி ஆலோசித்துக் காரியம் நடத்தும் நாளைக்காண மிக சந்தோஷப்படுவதற்கு என்னைக் காட்டிலும் வேறொருவர் இருக்கமாட்டார். ஏனென்றால் "ஜன சமூகம்" என்பது தற்போதுள்ள மாதிரி குறுகிய நோக்கமுடையவர்களின் எண்ணப்படி ஒரு ஜாதியாரை மட்டும் குறிக்காது. உண்மையில் அது எல்லா ஜாதிகளையும் குறிக்கும். ஆகவே இச்சக் குறுகிய நோக்கம் அறவே ஒழிந்து இந்தியாவிலுள்ள எல்லா ஜாதியார்களும் தேசீய ஒற்றுமையை யுணர்ந்து அதனால் நம் தேசிய நோக்கம் நிறைவேறும்படியான நாளைக் காணுவதற்கு நான் சந்தோஷப்படுவேன். ஆனால் இந்தக் கண்டனங்களுக்கிடையே அவைகளை எதிர்த்து தற்கால நிலைமையை நன்கறிந்து இந்த ஜாதீய மகாநாடுகளென்று சொல்லப் படுபவைகள் கெடுதி கலந்தவைகள் என்பதல்லாது ஒரு தனி ஜாதியாருக்கு மட்டுமல்லாமல் தேசத்துக்கும் மிக முக்கிய நன்மைகள் தரக்கூடியவைகள் தான் என்று சொல்ல நான் தயங்கமாட்டேன். கொஞ்ச நாளைக்கு முன் இத்தகைய ஒரு ஜாதீய மகாநாட்டில் பேசிய பொழுது இத்தகைய மகாநாடுகளின் உயர்ந்த தேசீய நோக்கத்தைப்பற்றி அழுத்தமாகச் சொல்லியிருக்கிறேன்.

ஏனென்றால் பல வகுப்பினர்கள் கூடித்தான் ஒரு தேசத்தினராகியிருக்கிறார்களென்று நாம் நன்கறிந்ததே. தேசத்தினரின் ஒவ்வொரு பகுதியும் முன்னேற்றமடையாதிருப்பதால் எப்படி ஒரு தேசத்தினர் முன்னேற முடியும்? ஒரு தேசத்தினர் பலவிதமான அவயவங்களுடன் கூடிய மனித தேகத்துக்கு ஒப்பிடப் பட்டிருக்கின்றனர். தேகத்தின் பல பாகங்கள் ஆரோக்கியமாயிராமல் எப்படி தேகம் ஆரோக்கியமாயிருக்க முடியும்? ஒரு சரியான பயில்வானின் தேகத்தின் ஒவ்வொரு அவயவமும் நன்கு பலம் பெற்று தேர்ச்சி யடைந்திருக்கின்றது. அது போலவே ஒரு தேசத்தினரும். ஆகவே ஒவ்வொரு ஜாதியாரும் தனிப்பட எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைவது தேசீய அபிவிர்த்திக்கு அவசியமில்லையா? இந்த நிலைமையில் ஒவ்வொரு ஜாதியாரும் தங்களை உயர்த்திக் கொள்வதிலும் தன்மதிப்பைத் தங்களுக்குத் தேடிக் கொள்வதிலும் செய்யும் முயற்சிகளை தேச நன்மையை உத்தேசித்து ஆதரிக்க வேண்டுமென்ற கருத்துடையவனாயிருக்கிறேன்.

தேசிய நோக்கத்தைக் கருதாவிடினும் ஜாதீய அபிவிருத்திக்கு இத்தகைய வருஷாந்திர மகாநாடுகள் கூடுவது எவ்வளவு தேவையாயிருக்கிறதென்பதைச் சிறிது நேரம் யோசியுங்கள். சமுதாய விஷயத்தில் ஒவ்வொரு ஜாதியாருக்கும் அனேக துன்பங்களும் கஷ்டங்களுமிருக்கின்றன. அவைகளை எதிர்த்து ஜெயிக்க வேண்டியது தலைவர்களுடைய கடமையாகும். அவைகள் இத்தகைய மகாநாடுகளில் ஆலோசித்து காரியங்களை எந்த வழியில் நடத்துவது என்ற முடிவுக்கு வருவதாலேயே சாதிக்க முடியும். அனேக சமுதாய விஷயங்களும் மற்றக் கஷ்டங்களும் நமது மனதைக் கவருகின்றன. இதுபோலொத்த மகாநாட்டின் உறுத்த தீர்மானங்களும் ஒற்றுமையான நடபடிக்கையுமே அவைகளை நிவர்த்தி செய்யக்கூடியவைகளாக இருக்கின்றன. அதோடு சமூகம் ஒற்றுமையடையக் கூடும். சமூக ஒற்றுமையால் சமூகத் தேவைகளும் குறைகளும் நிவர்த்தியாகின்றன. ஒற்றுமையில்லாமல்லாது ஜெயம் அடைய முடியாது. ஒன்று சேர்ந்து செய்தலே ஒற்றுமையின் முக்கிய தத்துவமாகும். மற்றும் இம்மாதிரி மகாநாடுகள் நீங்கள் இதுவரை எவ்வளவு முன்னேற்றமடைந்திருக்கிறீர்கள் என்பதையும் முந்திய மகாநாடுகளில் நிறைவேறிய தீர்மானங்களைக் கைக்கொண்டு எவ்வளவு தூரம் அவைகளை அனுஷ்டித்திருக்கிறீர்கள் என்பதையும் கவனிக்க உங்களுக்கு உதவியளிக்கும். தோல்விகள் ஏற்படலாம். கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும். இம்மகாநாடுகள் காரியங்களைச் சாதிக்க மற்ற வழிகளையும் கஷ்டங்களுக்கு உதவியையும் அளிக்கவல்லவைகள். இந்த மகாநாடுகளில் வெவ்வேறு பாகங்களிலுள்ள உங்கள் ஜாதியின் அங்கத்தினர்கள் எல்லோரும் ஒன்றுகூடியிருக்கிறார்கள். இப்படி ஒன்றுகூடியிருப்பதானது கடைசியாக வெற்றியைத் தரக்கூடிய காரியங்களையும் எண்ணங்களையும் ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்வதற் கேதுவாகிறது. இம்மகாநாடுகளிலே நீங்கள் உங்கள் ஜாதித் தலைவர்களை நேருக்கு நேராகச் சந்திக்கிறீர்கள். தலைவர்கள், தங்களுடைய முந்திய வேலைகளையும் பின் செய்யவேண்டிய காரியங்களையும் பற்றி உங்களுடன் கலந்து ஆலோசிக்கிறார்கள். இம்மகாநாடு நீங்கள் அவர்களுடைய வேலையை மதிக்கும்படியும், நம்பிக்கையில்லாவிடில் கண்டிக்கும்படியும் செய்கிறது. இத்தகைய மகா நாடுகளில்த்தான், கொஞ்சவேலை செய்தவர்களையும், அல்லது அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட வேலைகளைச் செய்யத் தவறியவர்களையும் நீக்கி தன்னைப் பின்பற்றுவோரிடத்தில் இரக்கமும் அன்பும் உள்ளவர்களும், அவர்களிடத்தில் நம்பிக்கை வைத்துள்ளவர்களுக்கு எல்லாப் பலன்களும் கிடைக்கும்படி செய்ய உழைப்பவர்களுமாகிய புதிய தலைவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். மற்றும் இத்தகைய மகாநாடுகளில்த்தான் ஒவ்வொரு ஜாதியாரும் ஒன்று சேர்ந்து தேச நிர்வாகத்தின் எல்லாப் பிரிவுகளிலும் தங்களுக்குள்ள உரிமையை வற்புறுத்தவும் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சரியாகவும் தகுந்த மரியாதையுடனும் நடத்தப்படவும், தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லவும் ஏதுவாயிருக்கிறது.

### சமூக ஒற்றுமை.

கனவான்களே!

ஜாதீய மகாநாடுகளின் அவசியத்தை இவ்வளவு அதிகமாகச் சொல்லிவிட்டு ஒரு எச்சரிக்கை செய்ய நான் விரும்புகிறேன். உங்களை முன்னேற்றக்கூடிய காரியங்களைச் சாதிப்பதற்கு சந்தர்ப்பமளிக்க வற்புறுத்துவதே உங்களுடைய உரிமையாகும். ஆனால் இதைச் செய்யும்போது மற்ற ஜாதியாருடன் வெறுப்புக் கொள்ளாதிருக்கும்படி நீங்கள் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். உங்களுடைய ஜாதியாரை முன்னேற்ற முயற்சிப்பதில் எவ்வகையிலாவது மற்றவர்களைத் தாழ்த்தவாவது குறைவாய்ப் பேசவாவது அவர்களுடைய முன்னேற்றத்தில் தடை செய்யவாவது முயலக்கூடாது. 'வாழவிட்டு வாழுங்கள்' என்ற பழமொழி எக்காலத்தையும்விட இக்காலத்தில் அதிகமாக நினைவிலிருக்கவேண்டும். ஜாதீய விடாமுயற்சியும் போட்டியும் ஒரு தேசத்தினருக்கு ஒரு நற்குறியேயாயினும், அது ஜாதிக்குள் விரோதத்துக்கு வழி ஏற்படக்கூடாது.

இத்தகைய குரோதங்கள், ஒரு தேசத்தினர் கொள்ளத்தகாத உட்கலகங்களில் முடிகிறது. அப்பொழுதுதான் ஜாதீய மனப்பான்மை தேசியத்துக்கு விரோதமென்று கண்டிக்கப் படுகிறது. ஆகையால் ஜாதீய மனப்பான்மையை ஆதரிக்கிறவர்கள் வெகு ஜாக்கிரதையாயிருக்க வேண்டியது. பூர்த்தியான ஜாதீய சகோதரத்வத்தைக் காட்டிலும் வேறு அநுகூலம் கிடையாது. இப்பேர்ப்பட்ட உயர் நிலை, பரஸ்பர சகிப்புத் தன்மையாலும் ஒருவர்க்கொருவர் இரக்கமான மனப்பான்மையாலுமே அடைய முடிகிறது. எந்த நேரத்தையும் விட அதிகமாக இப்பொழுது ஜாதிக்கும்

(இதன் தொடர்பு 3-ம் பக்கம் பார்க்க.)

லியலாத காரியம் யாதுமில்லை. அவர்கள் நம் நோக்கங்களைச் சாதிக்க முன் வருவார்களென்று நம்புகிறேன்.

### முடிவு.

நான் ஒன்றும் புதிதாகக் கூறவில்லை. இதற்கு முன் இந்தப் பதவியை வகித்த அனேகர் உரைத்தவைகளையும், நானே சென்ற வருஷம் கூறியுள்ளவற்றில் அனேகத்தையும் திரும்பியும் கூறியிருக்கலாம். நாம் நிறைவேற்றவேண்டிய விஷயங்கள் இன்னவென்பதை உங்கள் மனதிற் பதியும்படி செய்வதற்கே நான் இவ்வாறு செய்தேன். என் பிரசங்கத்தைப் பொறுமையுடன் கேட்டு என்னைக் கௌரவப்படுத்திய உங்களுக்கு என் வந்தனத்தைச் செலுத்துகிறேன். நான் கூறியவற்றுள் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரக் கூடியவை எவையாயினுமிருப்பின் அவ்வாறே செய்வீர்களாக. சுபம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



(அ பக்கத்தின் தொடர்ச்சி.)

ட்டதாய் நாம் இதுவரை நடத்தி வந்திருக்கும் மூன்றுகளை அநுசரித்த கிளர்ச்சிகளை மட்டும் நாம் இனியும் நடத்தி வருவோமாயின் நமக்கு நலமேற்படுமென்று எனக்கு முழு நம்பிக்கையுண்டு.

தேசிய வாழ்வில் நாகரிய ஸ்தானத்தை வகிப்பதற்கு நாம் அவாவுறுகின்றோமாதலின் அதற்கு யாதொரு விரோதமும் வேண்டுவதில்லை. ஆனால் உங்களுக்கு நான் ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகின்றேன். நாகரிய பாத்தியதைகளை வற்புறுத்தும் பொருட்டுப் பிறர் நம்மீது கொண்டிருக்கும் நல்லபிப்பிராயத்தைக் கெடுப்பதும் நியாய விரோதமுமான முறைகளை அநுசரிப்பதில் எனக்குச் சற்றும் விருப்பமில்லை. இவ்விதக் கூட்டங்களில் தலைமை வகித்துப் பேசிய கனவான்கள், வியாபாரத்திலும், கைத்தொழிலிலும், நீங்கள் பெற்றிருக்கும் சிறையும் பொதுக்காரியங்களில் கொண்டுள்ள சிரத்தையையும் அபிமானத்தையும் இன்னும் பல குணங்களையும்பற்றி வெகுவாய்ப் புகழ்ந்து பேசியிருப்பதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். ஆனால், என் பிரசங்கத்தில், உங்கள் விசேஷங்களைப் பற்றி அதிகம் நான் கூறவில்லை. உங்கள் பெருமையைக் குறைவுபடுத்த வேண்டுமென்ற அவ்விய நோக்கத்தோடு நானிவ்வாறு செய்வதாகக் கொள்வலாகாது. ஆனால் நாம் ஏற்கனவே அடைந்திருக்கும் சிறப்பைக் கருதிப் பெருமை அடைவதைக் காட்டிலும் மேன்மேலும் விருத்தியாவதற்கு எத்துறைகளில் முயற்சி செய்யலாம் என்று யோசிப்பது நலமென்று எனக்குத் தோன்றுகிறது. வியாபாரத்திலும், விவசாயத்திலும், முன்னேற்றமடைந்த ஒரு வருப்பினரென நமக்குப் பெருமை ஏற்பட்டிருக்கிறது. நாம் ஏற்படுத்தியிருக்கிற பல ஸ்தாபனங்களைக் குறித்தும் நாம் வெகுவாகப் பாராட்டப்படுகின்றோம். நாணயச் சங்கம் ஒன்று ஸ்தாபித்திருப்பதைக் குறித்து நாம் மதிப்படைகின்றோம். ஆனால் நம்முடைய வகுப்பின் நலத்திற்காகவென்று அமைக்கப்பட்டிருக்கும் இவைகள் பூர்த்தியான வளர்ச்சி பெற்றுவிட்டனவென்று நாம் கருதலாகாது. நம் மக்கள் அனைவருக்கும் இவைகளைப்பற்றிய ஊக்கம் அதிகப்படும்படி நாம் பிரசாரம் செய்யவேண்டும். பிரசார வேலையை நீங்கள் நிறுத்திவிட்டதைக் குறித்து நான் மனதில் வருத்தமும் கவலையும் அடைகிறேன். இவ்வாறு நீங்கள் என் முடிவிற்கு வந்தீர்களென்பதை இங்கு நான் நியாயம் ஆராயவில்லை. ஆனால் காரணம் எதாயிருப்பினும் சரி இவ்வாறு நாம் பிரசார வேலையை நிறுத்துவோமாயின் நாளடைவில் நமது சங்கத்தின் வாழ்விற்கே கேடாகும். சங்கங்களின் வாழ்வோ, தாழ்வோ பிரசார வேலையைப் பொறுத்ததாயிருக்கின்றது. நமது சட்டசபைத் தேர்தலில் பிரசார வேலை எவ்வளவு சாதகமாயிருந்தது என்பதை நீங்கள் நினைத்துப் பாருங்கள். நம் வகுப்பினருள் ஒற்றுமை விருத்தியாகி, அங்கத்தினருக்குள் ஐக்கியப் பான்மை அதிகரித்து, நமது ஸ்தாபனங்கள் மேன்மேலும் பலமடைவதற்கு வெகு தீவிரமான பிரசார வேலை நன்கு நடைபெறுவதற்கான சில குறிப்புகளை நான் நாளைப் பிரசங்கத்தில் கூற உத்தேசிக்கின்றேன்.

நமது தேசத்திற்கு நாம் செய்ய வேண்டிய கடமையை மறக்கலாகாது. நமது வகுப்புக்கான விஷயங்களைக் காட்டிலும் தேசத்தின் முன்னேற்றத்திற்கான விஷயங்களே அதிக அவசியமானவை. இந்தியாவின் தேசிய வாழ்வின் முன்னேற்றம் நமது கிராமவாசிகளாலேயே தான் ஏற்படவேண்டும். சில வாரங்களுக்கு முன்பு மைசூர் சமஸ்தானம் மந்திரி அந்தச் சட்டசபை அங்கத்தினர்கள் முன்பு செய்த ஒரு பிரசங்கத்தில் அந்த ராஜ்யத்தின் அவாவைப் பின்வருமாறு வெளியிட்டுள்ளார்:—மைசூர் சமஸ்தானத்திலுள்ள அரசாங்கத்தார் சிறியதும் பெரியதுமான எல்லா கிராமங்களிலும் அவைகள் நலத்திற்கான எதுக்களை அமைத்தாலன்றி தமது கடமையைச் செய்து முடித்ததாகக் கருத முடியாது. கோடைகாலத்தில் வரண்டுபோகாத ஒரு குடி தண்ணீர்க் கிணறும், நல்ல ஸ்திதியில் மராமத்துச் செய்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு குளமும், தேர்ச்சி பெற்ற ஒரு உபாத்தியாயரோடாவது கூடிய ஒரு பள்ளிக்கூடமும், நன்கு நடைபெறும் ஒரு ஐக்கிய நாணயச்சங்கமும் போதுமான அளவு மருந்துகளோடு கூடிய ஒரு வைத்தியசாலையும் இல்லாத கிராமமொன்றும் இருத்தலாகாது. இவர் கூறியுள்ளவற்றில் ஒன்றும் வீணானது அல்ல. அவர் கூறியவற்றோடு நான் இரண்டு விஷயங்கள் சேர்க்க விரும்புகிறேன். முதலாவது ஒரு வாசகசாலை, இரண்டாவது நமது சங்கத்தின் கிளை ஒன்று. இவைகளனைத்தும் அமைந்துள்ள கிராமங்கள் எவ்வளவுக் கெவ்வளவு அதிகப்படுகின்றனவோ அவ்வளவிற் கவ்வளவு நமது தேசம் முன்னேற்றம் அடையும். நமது வகுப்பினர் பெரும்பான்மையாய் வசிக்கும் எத்தனை கிராமங்களில் இவ்வசதிகள் உள்ளன? அரசாங்கத்தாரிடமிருந்து நமது கிராம நிர்மாண வேலைக்கான அதிக உதவியை நாம் எதிர்பார்ப்பது நியாயமாகாது. ஜன சமூகக் காரியங்களில் அபிமான மிகுதி கொண்டவர்களும் சமுதாய விஷயங்களை ஏற்பாடு செய்வதில் மிகுந்த ஊக்கமுடையவர்களுமான நாம், இவ்வேலையை மேற்கொண்டு தேசத்திற்குப் பாடுபடல்வேண்டும். பிரதமப் பாடசாலைகளும் உயர்தரப் பாடசாலைகளும் நாம் அனேகம் ஸ்தாபித்துள்ளதாலும் ஒரு கல்லூரி ஸ்தாபிக்க உத்தேசித்திருப்பதாலும் மட்டும் நம்முடைய ஜனங்களின் கல்வி யபிவிருத்திக்கான எல்லா வசதிகளும் செய்துவிட்டோம் என்று மனதில் எண்ணலாகாது. பாமர ஜனங்களுக்கும் கல்வி யபிவிருத்தி ஏற்படவேண்டுவது அவசியம். ஏனெனின் பொதுமக்களின் ஆட்சியும், சமுதாயச் சீர்திருத்த முயற்சிகளும் கல்லாமை நீங்கி கல்வியபிவிருத்தியானாலன்றி பயனிலவாகும். பொதுவாகக் கூறுமிடத்து ராஜீய விஷயங்களில் தோன்றும் அனேக தீமைகளுக்கும் கேடுகளுக்கும் கல்லாமையே முக்கிய காரணமாகும். தெரிந்தெடுப்புக் காலங்களில் காணப்படும் பல தீமைகளும் அறவே ஒழியவேண்டுமாயின் பொது மக்களின் கல்வி விருத்தி அடைதல்வேண்டும். முந்தின ஸென்ஸஸ் கணக்கின்படி நம்மவர்களில் கற்றவர்களின் தொகை திருப்திகரமானதாயில்லை. மறு ஸென்ஸஸ் எடுக்கப்படும்போது நமது தொகை விருத்தியைப்பெற்றிருக்க வேண்டுமென்பதே என் அவாவாகும். இன்னும் மற்றும் பல துறைகளிலும் நாம் செய்யவேண்டிய வேலைகள் அனேகம் உள்ளன. அவைகளை நாளையத்தினம் எடுத்துரைக்கிறேன்.

நான் என் பிரசங்கத்தை முடிக்குமுன் நமது வாலிபர்களையும் இளைஞர்களையும் தமது தேச சேவைக்கு முன் வரும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். தம் வருப்பின் மூலம் தமது தேசத்திற்குப் புரியும் தொண்டே மற்றெச் சுதந்திரத்திலும் பெருமையிலும் மேம்பட்டது என்பதை அவர்கள் உணர்தல் வேண்டும். இக்கருத்தையேதான் பல தலைவரும் பல கூட்டங்களிலும் வெளியிடுகின்றனர். இத்தாலி, ஜெர்மனி, பாரசீகம், சைனு இத்தேசங்களின் சரித்திரத்தினின்றும் எந்தத் தேசத்தின் முன்போக்கிற்கும் அத்தேசத்தின் வாலிபர்கள் முன்வந்து செய்யும் தொண்டே காரணமாகுமென்பது தெளிவாய் விளங்கும்.

(7-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

தங்கள் கடமையைச் செய்து வருகிறார்கள் என்பதில் குற்றம் கூற முன்வரோம். எல்லோர்க்கும் நமது நாடு க்ஷேமம் பெறுவதில் ஆசைதான்—ஆர்வம்தான். ஆனால் அதற்கான வழிகளில் மட்டும் பேதமேற்படுவதால், யாவரும் கண்டு அருவருப்புக் கொள்ளும்படியான நிலைமை தற்போது நாட்டில் தோன்றி யிருப்பது குறித்து யாரே துயருறார்? இந்நிலைமை குறித்து நான் மிகவும் வருந்துகிறேன். நமது சமூகத்தாருக்கு நமது நாட்டின் பேரில் இயற்கையாகவே அபிமான முண்டென்பதை நான் அறிவேன். ஆனால் நாட்டின் இந்நிலைமையில் நமது சமூகம் யாது செய்வதென்பதில் சங்கை கொண்டிருப்பதையும் அறிவேன். தனிப்பட்ட முறையில் நம்மவர் அவரவர் மனச்சாக்ஷிக்கேற்ப கக்ஷியைத் தாங்கி நிற்பினும், நமது சமூகமுறாதாவில் நாமாக எதிலும் சார்ந்து வேலைசெய்ய எது வில்லாதபடி நமது நாட்டு நிலைமை இருந்து வருவதுபற்றி நாம் வருந்த வேண்டியவர்களா யிருக்கிறோம்.

முடிவுரை.

போதுமையாளர்களே!

வரவேற்புக் கமிட்டியின் சேர்மன் என்ற ஸ்தானத்தில் இது வரையில் நான் சொல்லிவந்த முன்னுரைகளைச் செவிசாய்த்து சந்தோஷத்துடன் கேட்டிருந்த உங்களிடம் முடிவுரையாக இன்னும் சில வார்த்தைகள் சொல்லி என் சிற்றுரையை முடித்துவிடுகிறேன்.

ஏற்கனவே நான் சொல்லி வந்தவைகளில், கல்வி விஷயத்தில் நாம் அவசியமாகவும் அவசரமாகவும் உயர்தரக் கல்லூரி ஒன்று ஏற்படுத்த வேண்டுவதிலும், நம்மவர் பள்ளிக்கூடங்களின் மானேஜர்கள், ஹெட்மாஸ்டர்கள் அடங்கிய போர்டு ஒன்று ஸ்தாபிப்பதிலும் பெண்கல்வியை விருத்தி செய்வதிலும், நமது சமூக ஒற்றுமைக்குப்பெரிதும் மகமை தரும் மகிமை விஷயத்தில், நம் முன்னோர்கள் செய்து வைத்த வழியை பின்பற்றித் தயங்காது நடந்துவரவேண்டுமென்பதிலும், வியாபாரம், கைத்தொழில் இவைகளில் முன்னேற்றமடைய அத்தியாவசியமாய் பல லிமிட்டெட் கம்பெனிகளை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டுமென்பதிலும், விவசாயத்தில் நூதன முறைகளைக்கையாள வேண்டுமென்பதிலும், வாவா அபிவிர்த்தி முகங் காட்டிவரும்நமது பாங்கில் பயமின்றிப் பங்கு சேர்ந்து, தக்கவட்டியில் பணத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்பதிலும், நமதுசமூகப் பத்திரிகைகளுக்குப் போதிய ஆதரவுகொடுத்து வரவேண்டுமென்பதிலும், நமது வாலிபர்களின் முயற்சியில் விசேஷ அபிமானம் காட்டி, ஊக்கமூட்டி, பொது வேலைகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டுமென்பதிலும், நாம் முற்போக்கு அடையும் விஷயமாக வெறும் வாய் வேதாந்தத்தாலன்றிக் காரியாம்சத்திலே நமது முயற்சியைச் செலுத்த வேண்டுமென்பதிலும், தேசிய விஷயமாக நமது தமிழ் நாட்டிலுள்ள கக்ஷிகளின் நோக்கம் பற்றி நாம் குற்றம் கற்பிக்காது, தேசநன்மைக்கு அவசியமெனத் தோன்றும் விஷயங்களில் தங்கள் மட்டில் தலையிட்டு உழைத்து வரவேண்டுமென்பதிலும், கண்ணுங்கருத்துமாயிருந்து கங்கணங்கட்டி வேலைசெய்யுமாறு வேண்டுகிறேன்.

ஆசார சீர்திருத்த விஷயமாக நாம் கவனிக்கவேண்டிய விஷயங்கள் இல்லாமலில்லை. அவைகள் விஷயமாகவும், போதிய ஊக்கமெடுக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

நம் முயற்சியாலும் இறைவன் திருவருளைக் கொண்டும் நமது நோக்கங்களை நாம் நிறைவேறச் செய்வோமாக. தேசிய வாழ்வில் நமது வகுப்பு முன்னணியில் நிற்பதற்கு வேண்டிய உதவி புரிய வல்ல இச்சங்கத்தை வளரச் செய்வீர்களென்பது எனது கோரிக்கை. இவ்விஷயங்களில் உங்களை ஒத்துழைக்கும்படி நான் கேட்டுக் கொள்ளுகிறேன். முயற்சி தன் மெய் வருந்தக் கூலிதரும் என்பதை நாம் நமது கொள்கையாகக் கொண்டு நமது கடமைகளைச் செய்வோமாக!

## இராசியாயினர்.

சென்னை சட்டசபை மெம்பரும், "நாடார் மகாஜன சங்கம்" உபதலைவருமான பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான் W. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் அவர்களுக்கும், ஷையூர் தாலுகா போர்டு தலைவர் ஸ்ரீமான் கே. எஸ். யன். பெரியதம்பி நாடாரவர்களுக்கும் நீண்டகாலமாக இருந்து வந்த மனஸ்தாபம், அவர்களிருவரும் சென்னை நகரைச் சார்ந்த காமாக்ஷிபுரம் நாடார்களுக்குள்ளேற்பட்டிருந்த அபிப்பிராய பேதம் நீக்க அழைக்கப்பெற்று பஞ்சாயம் செய்யப் போன காலத்து நீங்கி மனராசி யேற்பட்டு விட்டது. காமாக்ஷிபுரம் நாடார்களின் ஒற்றுமை நிறுவி விட்டுத் திரும்புகாலில் ஸ்ரீமான் சௌந்தரபாண்டிய நாடாரவர்களின் மோட்டார் வாகனத்திலேயே ஸ்ரீமான் பெரியதம்பி நாடாரவர்களும் இருக்கைகொண்டு, இருவரும் உளம்பூத்த உவகையோடு ஒருவருக்கொருவர் அளவளாவிக் கொண்டவராய் ஊர் வந்து சேர்ந்தனர். இவர்களிருவரும் ராசியாயினது பற்றி யான் மிகவும் சந்தோஷிக்கிறேன். இது முதல் இவர்களிருவருக்கும் யாதொரு விதமான அபிப்பிராய பேதமும் ஏற்படாதிருக்க இறைவன் அருள்வாராக.

எஸ். பி. யன். செட்டியார்,

நிலக்கோட்டை.

நமது சமூக முன்னேற்றத்தில் மிகுந்த அக்கரை கொண்டும், நமது அபிவிர்த்தியில் பெரிதும் அபிமானங் காட்டியும், தமக்குள்ள பொறுப்பான வேலைகளையும் பொருட்படுத்தாது நமது வேண்டு கோளுக்கிணங்கி, நமது சென்னை மாகாண முதல் மந்திரியும், குமாரமங்கலம் ஜமீன் தாரும், சுயேச்சை கக்ஷியின் தலைவருமான கனம். டாக்டர். பி. சுப்பராயன் எம். ஏ., பி. ஸி. எல்; எல் எல் டி. பார் அட்லா அவர்கள் இங்கு விஜயம் செய்து, நமது மஹா நாட்டைத் திறந்துவைப்பதால் நாம் அடையும் பெருமை அளவிடற்பாலதோ! அவர்களின் விஜயம் நமக்கு ஒரு திணையே. இத்துணை கொண்டு, அவர்களின் உபதேசங்களை நன்கு ஏற்று, அதன்படி நடக்குமாறு உங்களை வேண்டுகிறேன்.

எனது சிற்றுரையில் நமது சமூக சம்பந்தமாக நான் அவ்வள வாகச் சொல்லி விட்டேனென்று கூறமுடியாது. நான் கூறாது விட்டவைகளையும் தாங்களே ஆலோசனை புரிந்து அவைகளில் புனிதமானவைகளைக் கைக்கொண்டும், நான் சொல்லிவந்தவைகளைச் சீர்தூக்கி உங்கள் மனத்திற்கு நேர்மையாய்த் தோன்றுவனவற்றை ஏற்றும் நடந்து கொள்ளும் மார்க்கங்களில் தளரா ஊக்கமும் உற்சாகமும் அளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நாம் எப்பொழுதும் இராஜ விசுவாசிகளாகவே இருந்து வந்திருக்கிறோம். நமது பிரிட்டிஷ் ஆக்ஷியின் கீழ் இராஜ விசுவாசிகளாய், சுயேச்சையும், தன்மதிப்பும் உடையவர்களாய் தேசப் பற்றுடையோராய் க்ஷேமமுடன் வாழ்ந்து வரவும், நமது இராஜ குடும்பம் நீடூழி வாழவும் எங்கும் நிறைந்த பரம்பொருளைப் போற்றுவோமாக.

## நெபோலியன் தொப்பி.

பிரான்சில் வீராதிவீரராகி விளங்கிய நெபோலியன் போனபார்ட்டை அறியாதார் எவருமிரார். அவர் அணிந்து வந்த தொப்பி யொன்றை சமீபத்தில் பாரிஸில் ஏலம் போட்டார்கள். அத்தொப்பியின் விலை ரூ 7,500 தானென நிர்ணயித்திருந்தார்களே யெனினும், அதை ஏலம் போட்டபொழுது ஜனங்கள் உற்சாகத்தால் ரூ. 18,750-க்கு ஏலமெடுத்தனர். முடிவில் அப்பெருந்தொகை ஏலமெடுத்தவர் ஒரு பிரஞ்சு உத்தியோகஸ்தராகும். அக் காலத்திலிருந்த ஒரு பெரியார், அத்தொப்பி நெபோலியனுடையதேயென நற்சாட்சியளித்த கடிதமொன்றும் அந்த தொப்பியுடன் இருக்கிறது. அத்தொப்பி நன்றாகத் தொப்பியாய் விளங்குவதோடு முன்பக்கமெல்லாம் கிழிந்து கந்தையைப் போன்றிருக்கிறது.